# திரித்துவத்திற்கு திருக்குர்ஆனில் ஆதாரமா?

ஆசிரியர் : அபூ ஆசியா, வெளியீடு : ஃபுர்கான் பப்ளிகேஷன்ஸ் ட்ரஸ்ட்

பிதா - குமாரன் - பரிசுத்த ஆவி இம்மூன்றும் ஒன்றாயிருக்கிறது, என்பது கிறித்துவம் கூறும் திரித்துவம் ஆகும். இதுவே கிறித்தவ மதத்தின் அடிப்படைக் கடவுள் கொள்கையாகும்.

வேதாகமத்தின் படி இஸ்ரவேலே, கேள் நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உபாகமம் (6:4). ஆயினும் அவருடைய ஒரு நாமத்திலே மூவர். உயர்ந்த ஸ்தானமுள்ளவர்களாய் சதாகாலமும் இருக்கிறார்கள். (மத்தேயு 28:18) இவர்களை மூவராக நாம் பிரிக்கக் கூடாது. அதாவது இவர்களிலுள்ள வேற்றுமைகளினால் மூன்று வெவ்வேறு தெய்வங்கள் என்று எண்ணக் கூடாது. அன்றியும், இந்தத் திரித்துவத்தில் ஒருவரும் முந்தினவரும் அல்லர். பிந்தினவரும் அல்லர். ஒருவரில் ஒருவர் பெரியவரும் அல்லர். சிறியவரும் அல்லர். •அனைவரும் சமநித்தியரும் சரிசமமானவரும் ஆவர்: (ஆதார நூல்: இஸ்லாமியர்களை சந்திக்கும் முறை' by F.D. டேவிட் சுவிசேஷ ஊழிய நூல் நிலையம் வெளியீடு. சென்னை -7)

வேதாகமத்தில் அதாவது பைபிளில் ஒரே உண்மையான தேவன், தம்மை பிதா - குமாரன் - பரிசுத்த ஆவியாக வெளிப்படுத்துகிறார். இந்த திரித்துவக் கொள்கை கிறித்தவர்களால் புதிதாக கண்டு பிடிக்கப்பட்ட ஒரு கொள்கையல்ல, இது வேத வசனத்தில் வெளிப்படுத்தப்பட்ட விலையேறப்பெற்ற சத்தியம். (Ref: Ibid) - என்று வாதிக்கின்றார்கள். ஆனால், உண்மையில் திரித்துவம், சிருஷ்டி கர்த்தாவின் ஏகத்துவத்திற்கும் இயேசுவின் உபதேசத்திற்கும் எதிரானதாகும் என்று முஸ்லிம் உலகம் கூறியபோது., திரித்துவத்திற்கு திருக்குர்ஆனிலே ஆதாரம் உள்ளதே என்றன கிறித்தவ மிஷனரிகள்.

(மேலும் நாம் நிச்சயமாக மனிதனைப் படைத்தோம். அவன் மனம் அவனிடம் என்ன பேசுகிறது என்பதையும் நாம் அறிவோம்: அன்றியும் (அவன்)பிடரி(யிலுள்ள உயிர்) நரம்பைவிட நாம் அவனுக்கு சமீபமாகவே இருக்கின்றோம். ")

நஹ்னு' என்றால் நாமே என்று பொருள். இங்கே காணப்படும் நஹ்னு' என்ற வார்த்தை பன்மை வார்த்தையாகக் காணப்படுகிறது. இது இறைத் தத்துவத்தின் திரித்துவ நிலையைக் குறிக்கிறது. அப்படி இல்லையென்றால், அன' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அன' என்றால் நான் என்று பொருள். ஆக திரித்துவத்தை திருக்குர்ஆனே அங்கீகரித்துள்ளது பார்த்தீர்களா?

(நூல்: காஃபிலிருந்து கல்வாரிவரை By P.A. ஹட்ஸன் முடலர் சுவிசேஷ ஊழிய நூல் நிலையம் சென்னை -7)

தெளிவான ஏகத்துவம் பேசி, திரித்துவத்தை பெயர் கூறி அழைத்து கண்டிக்கும் திருக்குர்ஆனிலேயே திரித்துவத்திற்கு ஆதாரம் உள்ளது என்று கூறுவதால், திரித்துவத்தை ஆய்வுக்கு உட்படுத்தி அதன் உண்மை நிலையை எடுத்துக் கூறுவது அவசியமாகிறது.

## 1. பைபிள் கூறும் ஏகத்துவம்

பைபிள் இறை வேதம் என்பது கிறித்தவர்களின் நம்பிக்கை, ஆனால், பைபிள் தெளிவான ஏகத்துவத்தையே போதிக்கிறது. திரித்துவம் இறைவன் போதித்த தத்துவம் என்றிருந்தால், இறைவேதம் என்று கருதப்படும் பைபிள் அதைத் தெளிவாக நேரடியாக சொல்லியிருக்க வேண்டும்.

ஆதம் துவங்கி இயேசுவரைக்கும் உள்ள எந்த தீர்க்க தரிசியின் வாயிலிருந்தும் திரித்துவம் என்னும் பதமோ, அதன் அடிப்படையிலான போதனையோ வந்ததாக பைபிளில் எங்குமே காண முடியாது.

மோஸஸ் கூறுகிறார்:

கர்த்தர் எல்லா தேவர்களைவிடவும் பெரியவர் என்பதை இப்போது அறிந்திருக்கிறேன்". (யாத்திராகமம் 18: 11)

சாலமன் கூறுகிறார்:

கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம், பரிசுத்தரின் அறிவே அறிவு." (நீதிமொழிகள் 9: 10)

ஏசாயா கூறுகிறார்:

பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன். சோர்ந்து போவதுமில்லை. இளைப்படைவதுமில்லை (ஏசாயா 40: 28) என்று கூறுகிறார்.

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி: என் தேவனாகிய கர்த்தாவே, நீர் மிகவும் பெரியவராயிருக்கிறீர், மகிமையையும் மகத்துவத்தையும் அணிந்து கொண்டிருக்கிறீர். (சங்கீதம் 104: 1)

உண்மையில் பைபிள் கூற்றின் அடிப்படையிலும், இயேசுவும் அவருக்கு முந்திய தீர்க்கத்தரிசிகளும் இறைவன் ஒருவன் என்றே நம்பியிருந்தனர். பிரபஞ்சத்தையும் அதில் உள்ள பொருட்களையும் இயேசுவையும் பரிசுத்த ஆவியையும் அந்த இறைவனே படைத்தான் என்று நம்பியிருந்தனர். இயேசுவின் சொல்லும் செயலும் இதை தெளிவுபடுத்துகிறது.

இயசே கூறுகின்றர்:

1. என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார் (யோவான் 14:28)

2. என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. (யோவான் 7: 16)

3. என்னை அனுப்பின பிதா தாமே என்னைக் குறித்துச் சாட்சி கொடுத்திருக்கிறார், நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை. அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை.. (யோவனர் 5: 37)

4. நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்: பேதுரு பிரதியுத்தரமாக நீர் தேவனுடைய கிறிஸ்து என்றான். (லூக்கா9: 20)

5. அதற்கு இயேசு: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே. (மாற்கு 10:18)

6. அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே: உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். (மத்தேயு 4: 10)

7. இயேசு அவனை நோக்கி: என்னைத் தொடாதே! நான் இன்னும் என் பிதாவிடத்திற்கு ஏறிப் போகவில்லை. நீ என் சகோதரரிடத்தற்குப்போய், நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார். (யோவான் 20:17)

8. ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். (யோவான்17:3)

மேற்கானும் பைபிள் வசனங்கள் கடவுள் ஒருவரே என்னும் ஏகத்துவமே பேசுகிறது. இயேசுவை கடவுள் என்றோ, அவதாரம் என்றோ, கடவுளின் ஒரு பகுதியென்றோ அம்சம் என்றோ கூறுவதற்கு எதிராக உள்ளது. குறிப்பாக யோவானின் 17:3 வசனமானது, திரித்துவத்தை எல்லாவிதத்திலும்

எதிர்க்கும் வசனமாகவும் உள்ளது. எனினும் கிறித்தவர்கள் திரித்துவம் என்னும் அடிப்படை ஆதாரமற்ற தத்துவத்தை ஏற்று வருகின்றனர். வெறும் கட்டுக்கதைகளின் அடிப்படையில் உருவானதே திரித்துவம் எனப்படும் தத்துவம், பண்டைய நாகரீக நகரங்களில் இது போன்ற தத்துவங்கள் காணப்பட்டதுண்டு. அதிலிருந்து பிரதி எடுக்கப்பட்ட ஒரு தத்துவமே திரித்துவம். இதை பைபிளும் முன்னறிவிப்புச் செய்கிறது.

இயேசு கூறுகிறார்: ம்இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்: அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாய் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்.“

பவுல் கூட இப்படி கூறுகிறார்: ம்அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்கு விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும். (ஒஒ தீ மோத்தேயு 4:3,4)

அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கை பண்ணுகிறார்கள். கிரியைகளினாலே அவரை மறுதலிக்கிறார்கள். அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள். (தீத்து 1:16)

## 2. திரித்துவத்தின் தோற்றம்

திரித்துவ நம்பிக்கையானது, பண்டைய சமூகத்தார் சிலரிடமிருந்து வந்ததாகும். நம் இந்திய நாட்டிலும் இத்தகைய நம்பிக்கை இருந்தது என்பதை இந்து புராணங்களிலும் இன்றைய இந்துக்களின் நடைமுறையிலும் காணமுடிகிறது.

இந்தியா

ஒன்றில் மூன்று

| | | |
|---|---|---|
| பிரம்மா | சிவன் | விஷ்ணு |
| (படைப்பவர் | அழிப்பவர் | காப்பவர் |

பாபிலோனியா

ஒன்றில் மூன்று

| | | |
|---|---|---|
| பால் | செமிராமிஸ் | நிம்ரூத் |
| சூரியக்கடவுள் | கன்னித்தாய் | குமாரன் |

கிரேக்கம்

ஒன்றில் மூன்று

| | | |
|---|---|---|
| பால் | செமிராமிஸ் | நிம்ரூத் |

படைப்பாளர் கடவுளின் அரசன் ஒளிக்கடவுள்

எகிப்து

ஒன்றில் மூன்று

பால் செமிராமிஸ் நிம்ரூத்

ஓஸிரிஸ் ஐஸிஸ் ஹோரஸ்

அழிக்கும் கடவுள் இயற்கைக் கடவுள் ஒலிரஸின் மகன்

இவ்வாறு இந்தியாவைப் போல் பாபிலோனியோ, கிரேக்கம், எகிப்து என்று சில பண்டைய நாகரீக காலங்களில் மூன்று தெய்வக் கொள்கை நிலைநின்று வந்துள்ளது.

இயேசுவின் காலத்திற்குப்பின் ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளுக்கு பின் கிறித்தவத்தில் திரித்துவம் நுழைக்கப்பட்டது.

பவுலின் காலத்தில் கூட திரித்துவம் எனும் கோட்பாடு கிறித்தவத்தில் இல்லை. ஆனால், துவித்துவம் இருந்தது அதையும் உருவாக்கியது பவுல் ஆகும்.

பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் கூறுகிறார்: ம்அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக என்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்“. (பிலிப்பியர் 2:6,7)

பவுல் கொலோ செயருக்கு எழுதிய நிரூபத்தில் கூறகிறார்: ம்அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். (கொலோசெயர் 1:15)

...சவுல் (பவுல்) தமஸ்குவிலுள்ள சீஷருடனே சில நாள் இருந்து, தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான். (அப்போஸ்தலர் 9:20)

பவுல் தீமோத் தேயுவுக்கு எழுதிய முதலாம் நிரூபத்தில் தேவன் அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்,

ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாயிருக்கிறவர். அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. (ஓ தீமோத்தேயு 6:15,16)

பவுலுடைய இவ்வசனங்களிலிருந்து நாம் தெளிவாக விளங்கிகொள்ளும் விஷயங்கள்...

1. கர்த்தர் ஒருவர் உண்டு. அவரே மேலானவர். யாராலும் காண முடியாதவர்.

2. கர்த்தரே மனித அவதாரம் எடுத்து, இயேசுவாக இவ்வுலகிற்கு வந்தார்.

3. இயேசு கர்த்தருடைய குமாரன்.

இதில் இயேசு கர்த்தரின் அவதாரமா? குமாரனா? என்பதில் முரண்பாடு. என்றாலும் இயேசுவும் கடவுளே, கர்த்தரும் கடவுளே. கடவுளே கர்த்தரின் குமாரனாகவும் இயேசுவாகவும் இருக்கிறார் என்னும் கோட்பாட்டை பவுல் கொண்டிருந்தார். அதாவது பவுலின் கொள்கை திருத்துவமல்ல. துவித்துவமாகும். ஆனால் அதனாஸியஸ் என்பவரின் நைஸீன் கீரீட் (Nicene creed) தான் திரித்துவம் பற்றிக் கூறுகிறது.

நைஸீன் கிரீட் கி.பி. 325 ல் அங்கீகரிக்கப்படவில்லை. அக்காலத்தில் சக்ரவர்த்தியாக இருந்த மகா காண்ஸ்டன்டனே துவித்துவத்தை (பிதாவும் குமாரனும் ஒன்றே என்னும் ஏகத்துவத்தை) அங்கீகரித்து பிரபலமாக்கினார். கி.பி 381-ல் கான்ஸ்டன் நோப்பிளில் நடந்த கவுன்ஸிலில் வைத்துத்தான் நைஸீன் கிரீட் அங்கீகரிக்கப்பட்டது. இதை செய்தது அன்றைய சக்ரவர்த்தியாக இருந்த தியோடோஸியஸ் ஆகும். கி.பி. 373 லேயே நைஸீன் கிரீட் எழுதிய அதனாஸியஸ் இறந்துவிட்டார்.

(1. இயேசு தேவனின் குமாரன், தேவன் இயேசுவின் பிதாவும் என்றால், பிதாவுக்கு பின்பு அல்லவா குமாரன்? பிதா, குமாரனுக்கு முன்பும் இருந்தாரல்லவா? இருந்தாரெனில் குமாரன் இல்லாத ஒரு காலமும் இருந்ததே? அப்படியானால், குமாரன் என்றென்றும் நிலை நிற்காத ஒரு படைப்பாகும் என்றாகிறது. அதே சமயம் தேவன் என்றென்றும் நிலைநின்றான் என்றாகிறது. அதனால் குமாரன் தெய்வமல்ல.

2. தெய்வத்திற்கு மாற்றம் இல்லை. ஆனால் இயேசுவுக்கு மாற்றம் ஏற்பட்டிருந்தது. இயேசு பிறக்கவும் வளரவும் இறக்கவும் செய்தார்.

மட்டுமல்லாமல் இயேசு மக்களிடம் கூறினார். ம்என் பிதா என்னிலும் பெரியவராக இருக்கிறார். (யோவான் 14:28) அப்படியானால் இயேசுவும் பிதாவும் தனித்தனியானவர்கள். என்று நம்புவது சரிதானே?“)

இப்படி உண்மையை சொன்ன ஆரிய்யஸை சபை வெளியாக்கவும், கொடுமைப்படுத்தவும் செய்தது.

ஆரிய்யஸ் எழுதினார்: ம்நாம் கொடுமைப்படுத்தப்படுகிறோம். காரணம் இயேசுவுக்கு ஆரம்பம் உண்டு என்றும், தேவனுக்கு ஆரம்பம் இல்லை என்றும் நாம் கூறியதால்தான்!“

(J.B. Firth: Constarntine the Great)

ஆதாரம்: இயேசுவின் பாதை முஹம்மதின் பாதை - பக்கம் 14,15)

இயேசு தன்னை கடவுள் என்றோ் கடவுளின் அவதாரம் என்றோ் கூறியதாக பைபிளில் எங்குமே இல்லை. பவுல் பிலிப்பியருக்கும் (2:6,7) கொலோசெயருக்கும் (1:1:5) எழுதிய நிருபத்தில் தான் அவ்வாறு கூறுகிறார். இன்னும் இயேசு கடவுளின் குமாரன் என்று முதன் முதலில் அறிமுகப்படுத்தி வைத்ததும் பவுல் ஆகும்.

இயேசுவோ, அப்போஸ்தலர்களோ கூறாததை முதன்முதலில் கூறிய பவுல் எத்தகையவர் என்றால்...?

1. அப்போஸ்தலர் 22: 1-57 வசனத்தின் பிரகாரம் இயேசுவின் விசுவாசிகளைத் துன்புறுத்தியவன்.

2. கலாத்தியர் 1:13-17 வசனத்தின்படி சபையைப் பாழாக்கியவன்.

3, அப்போஸ்தவர் 22: 17-20 வசனத்தின்படி கொலைகாரனுக்கு உதவியவன்.

4. அப்போஸ்தலர் 22: 6-16 வசனத்தின்படி பவுல் எந்தவொரு அத்தாட்சியும் இல்லாமல், இயேசுவை வானத்தில் தரிசித்து ஞானஸ்ஞானம் பெற்றுக்கொண்டதாக கூறி: சுயமே அப்போஸ்தலர் உரிமை கொண்டாடினவர்.

5. அப்போஸ்தலபர் 22: 21 வசனத்தின்படி புறசாதிகளுக்கு தான் அப்போஸ்தகனாக நியமிக்கப்பட்டுள்ளேன் என்று சுய உரிமை கோரினார்.

6, கொலோசெயர் 1: 13 வசனத்தின்படி இயேசு அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிகளுக்கும் முந்தின பேருமானவர் என்று இயேசுவும் அவர் சீடரும் கூறாத கருத்தைக் கூறினார்.

7. மத்தேயு 5:17-ல் நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதீர்கள்: அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்' என்று இயேசு கூறியிருக்க பவுலோ கலாத்தியர் 3: 13-ல் ம்கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்." என்று கூறினார்.

8. கலாத்தியர் 3:23-25-ல் இனி நாம் நியாயப்பிரமாணத்திற்கு கட்டுப்படவேண்டியதில்லை என்றார்.

9. மத்தேயு 5:18-ல் வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் நியாயப் பிரம்மாணத்திலுள்ளது எல்லாம் நிறைவேறுமாகவும் அதில் ஒரு எழுத்தாகிலும் ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." என்று இயேசு கூறியிருக்க எபிரேயர் 8:13-ல் பவுல் கூறுகிறார்: புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிற போதினாலே முந்தினதைப் பழமையாக்கினார், பழமையானதும் நாள் பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது" என்று இத்தகைய பவுல்தான், இயேசு கிறித்து கர்த்தரின் மனித உருவம் என்றும் நம்பிக்கையை முதலில் கற்பித்தார்.

## மகா காண்ஸ்ட்டன்டைன் (CONSTANTINE THE GREAT)

மகா காண்ஸ்ட்டன்டைன் சக்ரவர்த்தியின் ஆட்சி காலம் கி.பி 310 முதல் 337 வரையாகும். கிரேக்க தேவர், தேவிகளை வணங்கி வந்த ஒரு வர்க்க மதவாதியும் மதகுருவுமாவார் காண்ஸ்ட்டன்டைன். தன் தந்தையைப்போல் சசூரியக் கடவுளையும் வணங்கி வந்தவராவான். இரத்தவெள்ளத்தில் மூழ்கி எழுந்தே ஆட்சியைப் பிடித்தான் எனலாம். கொடுமை செய்தலும் அநீதி இழைத்தலும் அவனுக்குச் சர்வசாதாரணமாக இருந்தது. தன் இரண்டாம் மனைவியை நீரில் மூழ்கடித்துக் கொன்றான். முதல் மனைவியின் மகனை கொலை செய்தான். 11 வயதுடைய தன் மருமகளையும் கூட கொலை செய்தான். இருப்பினும் கிறித்தவர்களிடம் பகைகொண்டு இரத்தம் சிந்தாததால் கிறித்தவ வரலாற்று ஆசிரியர்களுக்கு காண்ஸ்ட்டன்டைன் மீது பாசமுள்ளது. பல மனைவிகளுடன் ஏராளமான வைப்பாட்டிகளும் அவனுக்கு உண்டு. அதில் அதிகமானோர் கிறித்தவப் பெண்மணிகளே! இதில் முக்கியமானவர் ஹெலென் என்னும் கிறித்தவப் பெண்ணாவார். அவனின் தாயும் கிறித்தவளாக இருந்தார்: கி.பி 312-ல் மேற்கத்திய நாடுகளோடு ஏற்பட்ட போரில், காண்ஸ்ட்டன்டைனுக்கு கிடைத்த காரணம் கிறித்தவர்களும் அவர்களின் கடவுளும் ஆகும் என்று காண்ஸ்டன்டைன் நம்பினான். அதன் விளைவாக 313-ல் ம்மிலான் அரசாணை" என்னும் பெயர் கூறி, கிறித்தவம் அரசாங்க மதம். அது எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய மதம் என்றும் விளம்பரம் செய்யப்பட்டது.

மிலான் விளம்பரத்திற்குப் பின் ஏகத்துவ வாதியான அரியூஸ் சகாக்களுக்கும், திரித்துவ வாதியான நைஸீன் கிரீட் தயாரித்த அதனாஸியஸ் சகாக்களுக்கும் இடையில் ஏற்பட்ட கலகத்தில் இரத்த ஆறு ஓடியது. அரியுஸின் குருவான லூஸின் கொல்லப்பட்டார். இதனால் நாட்டின் அமைதிக்கு பங்கம் ஏற்பட்டது. இதற்கு பரிகாரமாக சமாதான நடவடிக்கை எனும்பெயரில், நிகியா என்னும் இடத்தில் பிஷப்புகளை அழைத்துக் கூட்டினார்கள். இதில் 300 பிஷப்புகள் மட்டுமே கூடினர். அதில் பெரும்பான்மையினர், இயேசுவை கடவுளாக நம்பக் கூடியவர்களாக இருந்தனர் ம்இயேசு பிதாவுமாவார் குமாரருமாவார் என்னும் ஏகத்துவம் என்னும் ஃபார்மூலா உருவாக்கப்பட்டது. நிகியா கவன்ஸில் எடுத்த இன்ன பிற முடிவுகளையும் இரண்டு பிடிப்புகளையும் தவிர, மற்றெல்லா பிஷப்புகளும் ஏற்றுக் கொண்டனர்.

சூரியனை கடவுளாக வணங்கி வந்தவர்களையும் கிறித்தவத்தில் ஐக்கியப்படுத்த இன்னபிற விதிகளும் நிகியா கவுன்ஸிலில் வலியுறுத்தப்பட்டன. அவற்றில் சில...

1. கிறித்துவின் காலத்திலும் முன்பும், ஸபா' தினம் சனிக்கிழமையாக இருந்தது. சசூரியக்கடவுளை புனிதமாகக் கருதி, கொண்டாடி மகிழ்ந்த மக்களுக்காக ஸபா'தினம் சனிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக் கிழமையாக மாற்றப்பட்டது.

2. இயேசுவின் பிறந்ததினம் எது என்று திட்டவட்டமாக தெரியாமல் இருந்தது சசூரியதேவனின் பிறந்ததினமாக கருதப்பட்டு வந்த டிசம்பர் 25 இயேசுவின் பிறந்த தினமாக மாற்றப்பட்டது.

3. சசூரிய தேவனின் தலைக்குப் பின்னால் உள்ள ஒளிஅமைப்பு (Cross of light) சிலுவை சின்னத்திற்கு ஏற்ப இருந்ததால் அந்த சிலுவை மத சின்னமாக்கப்பட்டது.

இதன் பின் காண்ஸ்டன்டைன், ஆரியூஸினையும் அவரைப் பின்பற்றியவர்களையும் நாடுகடத்தினான். கி.பி 337-ல் காண்ஸ் டன்டைன் மரணப்படுக்கையில் கிடக்கும் போது தான் ஞானஸ்தானம் செய்யப்பட்டது.

NICENE CREED (நைஸீன் கிரீட்)

கி.பி. 381-ம் ஆண்டு (May - July 30) காண்ஸ்டன் நோபிளில் நடந்த கவுன்ஸிலில் தான் அதனாஸியஸின் நைஸீன் கிரீட் அங்கீகரிக்கப்படுகிறது. அப்போது அரசனாக இருந்தவர் தியோ டோஸியஸ் I (கி.பி 379-395) ஆவார். இந்த நைஸீன் கிரீட்தான் கிறித்தவர்களின் சத்தியப்பிரமாணம் ஆகும்.

### 3. திரித்துவத்திற்கு எதிராக பரிசுத்த வேதாகமம்

பிதாவும் தெய்வமாகும் - குமாரனும் தெய்வமாகும் பரிசுத்த ஆவியும் தெய்வமாகும். சமமான மூன்று தெய்வங்களும் மூன்று அல்ல. ஒரே தெய்வமாகும் என்னும் நைஸீன் கிரீடின் கோட்பாடு பைபிளின் அடிப்படையில் உருவானதல்ல. உருவாக்கப்பட்ட திரித்துவத்திற்கு ஆதாரத்தைத் தேடி பைபிள் வசனங்களை வளைத்து ஒடித்து புகுத்தி திரித்துவத்தை தூக்கி நிறுத்த முயற்சிக்கிறார்கள், என்றாலும் அது பொருந்திப் போவதில்லை அது மட்டுமல்ல பைபிள் வசனங்களுக்கே அது முரண்படுகிறது.

A. கீழ்காணும் வசனங்கள், பிதா குமாரன் பரிசுத்த ஆவி இம்மூன்றும் சமமல்ல என்று கூறுகிறது.

1. மத்தேயு 6:4-ல் ம்அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார் என்றுள்ளது. இதில் இயசே ஏன் மூன்றில் ஒன்றாக சமமானவர் என்று உரிமை கோரவில்லை.

2. மத்தேயு 12:32-ல் ம் எவனாகிலும் மனுஷ குமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால், அது அவனுக்கு மன்னிக்கப்படும். எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால், அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை என்றுள்ளது.

ஏன் இவ்விடத்தில் இயேசு தம்மை பரிசுத்த ஆவிக்கு சமமானவர் என்று கூறவில்லை?

3. மத்தேயு 27:46-ல் என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று சத்தமிட்டு கூப்பிட்டார் என்றுள்ளது: இயேசு தேவனுக்கு சமமானவர் என்றால் ஏன் தேவனைத் துணைக்கு அழைக்க வேண்டும்?

4. மத்தேயு 24:36-ல், ம்அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள் என்றுள்ளது. இயேசு பிதாவுக்கு சமமானவர் என்றால், ஏன் அந்த நாளையும் அந்த நாழிகையையும் குறித்து அறிந்திருக்கவில்லை?

5. லூக்கா 18:19 - ல் ம்இயேசு: நீ என்னை நல்லவன் என்று சொல்லுவானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே. என்று கூறியதாக உள்ளது தேவனுக்கு சமமாக இயேசு இருந்தார் என்றால் தன்னை நல்லவன் என்று கூறாதது ஏன்?

B கீழ் காணும் பைபிள் வசனங்கள் பிதா - குமாரன் - பரிசுத்த ஆவி ஆகிய மூன்றும் ஒன்றாக இல்லை என்று கூறுகிறது.

1. மத்தேயு 3:16-17ல் இயேசு ஞானஸ்ஞானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறின உடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது, தேவ ஆவி புறாவைப் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார் அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசக் குமாரன் , இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது என்றுள்ளது அதாவது பிதா வானத்திலிருக்கிறார். குமாரன் பூமியிலிருக்கிறார் பரிசுத்த ஆவி இரண்டுக்கும் மத்தியிலிருக்கிறது. அதாவது மூன்றும் ஒன்றாக இல்லை.

2. ஆதியாகமம் 1:2-ல், ம்தேவஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். என்றுள்ளது. அதாவது மூன்றில் இரண்டுள்ளது மூன்றில் ஒன்று (இயேசு) இல்லை.

3. மத்தேயு 17:23-ல் ம்அவர்கள் அவரைக்கொலை செய்வார்கள்: ஆகிலும் மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் என்றார்.“ என்றுள்ளது. அதாவது மூன்றில் ஒன்று இறந்து விடுகிற காலத்தில் மூன்றில் இரண்டு மட்டுமே இயங்கிக்கொண்டிருக்கிறது.

4. லூக்கா 1:31 - ல் ம்நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக“ என்றுள்ளது. அதாவது மூன்றில் ஒன்று கருவாக உள்ளது. லூக்கா 1:35ல் ம்பரிசுத்த ஆவி உன் மேல் வரும் உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்“ என்றுள்ளது. அதாவது மூன்றில் ஒன்று (இயேசு) பிறக்கும் முன்பே மூன்றில் இரண்டு இயங்கிக் கொண்டிருந்தது.

5. யோவான் 7:39-ல் ம்இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்த படியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை“ என்றுள்ளது. மகிமைப்படுத்தபடாததால் சமமானவரும் அல்ல. பரிசுத்த ஆவி சேர்ந்திருக்கவும் இல்லை.

மேலே குறிப்பிட்டுள்ள வசனங்களிலிருந்து மூன்றும் ஒன்றாய் இருக்கிறது என்று கூறும் நைஸீன் கிரீட்,, ஓர் அடிப்படையற்றது என்பது தெளிவு.

இன்னும் வம்சா வழி பற்றிய வரைப்படம் வரைவோமானால், பிதாவாக கருதப்படுபவர் தாத்தாவாகத்தான் கருத வேண்டியது வரும், குமாரனாக கருதப்படுபவர் பேரனாகத்தான் கருத வேண்டியது வரும்.

மத்தேயு 1:18 - ல், ம்இயேசு கிறித்துவினுடைய ஜனனத்தின் விவரமானது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப் பட்டிருக்கையில், அவர்கள் கூடிவரும் முன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. என்றுள்ளதால் இயேசுவின் பிதாவாக கணிக்கப்படவேண்டியர் பரிசுத்த ஆவியான வரையேயாகும் (அல்லாஹ் மன்னிப்பானாக?) மாற்கு 6:3ன் படி இயேசுவுக்கு தாய்வழி சகோதரர்களாக யாக்கோபு யோசே, யூதா, சீமோன் என்போர்களும் சகோதரிகளும் உண்டென்கிறது.

எனினும், பிதா குமாரன் பரிசுத்த ஆவி, என்னும் திரித்துவத்தை பைபிள் அடிப்படையில் கூறவே முடியாது. அப்படியிருக்க அதை அங்கீகரித்தது ஏன்?

நிகியா கவுன்ஸில் ஏன் திரித்துவத்தை அங்கீகரித்தது

இயேசுகிறித்து இறைவனாவார் என்னும் பவுலின் கண்டுபிடிப்பையும்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் என்னும் உண்மையையும் ஒன்று சேர்க்கவும், இரண்டும் சரியென்று சரிகாணவும், இரண்டும் கிறித்தவ மதத்தின் சித்தாந்தம் என்றும், அவற்றிற்கிடையில் முரண்பாடு இல்லை என்றும் தீர்மானிக்கவே திரித்துவம் என்னும் புதிய தத்துவத்தை நிகியா கவுன்ஸில் முன் வைத்தது. பவுலின் துவித்துவத்துடன் பரிசுத்த ஆத்மாவையும் சேர்த்துக்கொண்டது எதற்கென்றால்?

பரிசுத்த ஆத்மாவை ஏகத்துவத்தின் ஓர் அங்கமாக்குவதன் மூலம், பரிசுத்த ஆத்மா நிரம்பியவர்களை தெய்வீக மதிப்பிற்கு கொண்டு செல்லலாம். சபையானது பரிசுத்த ஆத்மா நிறைந்தவர்கள் அடங்கியது என்று உரிமை கொண்டாடும்போது, அவர்களின் வார்த்தைக்கு தெய்வீக தன்மையுண்டு என்று உரிமை கோரலாம். ஒரு சர்ச் பாதரின் முன்பு நிற்பதாக இருந்தாலும், அவர் பரிசுத்த ஆவி நிறைந்தவராக இருப்பதாக கருதப்படுவதால், ஒரு தெய்வத்தின் முன் நிற்பதுபோன்ற எண்ணம் விசுவாசிகள் மத்தியில் ஏற்படுகிறது.

இதன் மூலம் ஆதாயமுடைய புரோகிதர்களால் முடிந்தது. பரிசுத்த ஆத்மா நிறைந்தவராகி, நோய் நொடிகளை மாற்றிக்கொடுக்கும் பெந்தகோஸ்து சகோதரர்கள் செய்வது இதன் மற்றொரு வடிவிலாகும். மதபுரோகிதர்கள் ஒன்றை அனுமதித்தால், அது அனுமதிக்கப் பட்டதாகவும், ஒன்றை தடைசெய்தால் அது தடுக்கப்பட்டதாகவும் கருதப்படும் நிலையை ஏற்படுத்தியது. பரிசுத்த ஆத்மா நிறைந்தவர்களை தேவனின் பிரதிநிதிகளாகவும், அவர்களை அனுசரித்து செல்வது திரித்துவத்தை அனுசரிப்பதற்கு ஒப்பான நிலை ஏற்பட்டது. இதனாலேயே திருக்குர்ஆன் இவ்வாறு கட்டளையிட்டது.

அவர்கள் அல்லாஹ்வை விட்டும் தம் பாதிரிகளையும் தம் சந்நியாசி களையும் மரியமுடைய மகனாகிய மஸீஹையும் தெய்வங்களாக்கிக் கொள்கின்றனர். வேறெவரையும் வணங்கக்கூடாதென்றே கட்டளையிடப் பட்டுள்ளார்கள். வணக்கத்திற்குரியவன் அவனன்றி வேறு இறைவன் இல்லை. அவன் அவர்கள் இணைவைப்பவற்றை விட்டும் மிகவும் பரிசுத்த மானவன்" (அல்குர்ஆன் 9:31)

### 4. பிதா குமாரன் பரிசுத்த ஆவி

பிதா குமாரன் பரிசுத்த ஆவி ஆகிய மூன்றும் உண்டு என்பதில் முஸ்லிம்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், இம் மூன்றும் ஒன்றாயிருக்கிறது என்று கூறுவதைத்தான் எதிர்க்கின்றனர், காரணம் அது ஏக இறைவனுக்கு களங்கத்தை சுமத்தக் கூடியதாக இருப்பதால்தான்.

பிதா: இந்த பிரபஞ்சத்தை படைத்த இறைவனை. கர்த்தரையே பைபிள் பிதா என்றழைக்கிறது. ஒரு குறிப்பிட்ட குல தெய்வமாக ஏக இறைவனைக் கருதிவிடக் கூடாது என்பதற்காகவே இயேசுவும் முந்தைய தீர்க்கதரிகளும் பிதா என்றழைத்தார்கள் என்று பைபிள் விளக்கம் தருகிறது.

ஏசாயா கூறுகிறார்:

கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்:

நீர் எங்களை உருவாக்குகிறவர். நாங்கள் அனைவரும்

உம் கரத்தின் கிரியை, கர்த்தாவே, அதிகமாய்க் கடுங்கோபங் கொள்ளாமலும், என்றைக்கும் அக்கிரமத்தை நினைத்துக் கொள்ளாமலும் இருப்பீராக, இதோ பாரும், நாங்கள் அனைவரும் உம்முடைய ஜனங்களே (ஏசாயா 64:8,9)

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின் படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப் பானேயல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. (மத்தேயு 7:21)

இயேசு, வணக்கத்திற்குரியவர் என்று கூறும் பவுலும் கூறுகிறார்.

பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே

சகலமும் உண்டாயிருக்கிறது. அவருக்கென்று

நாமும் உண்டாயிருக்கிறோம். (I கொரிந்தியர் 8:6)

குமாரன்:

இறைவனால் நியமிக்கப்பட்ட நபரை - நபர்களை சிறப்பித்துக் கூற பைபிள் குமாரன் என்றும் குமாரர்கள்ம் என்றும் சொற்களை உபயோகப்படுத்துகிறது. குமாரன் என்றால் தெய்வகுமாரன் அதாவது தெய்வீக மதிப்பு பெற்றவர், திரித்துவத்தில் ஒருவர் என்னும் பொருளில் அப்பதம் உபயோகப்படுத்தப்படவில்லை. முந்தைய தீர்க்கதரிசிகளை குமாரன் என்று பைபிள் அழைத்தது போல்தான் இயேசுவை தீர்க்கதரிசி என்னும் நிலையில் பைபிள் புதிய ஏற்பாடும் அழைக்கிறது.

மனிதர்களும், இஸ்ரவேலர்களும், யாக்கோபும், தாவூதும், சாலமனும் பழைய ஏற்பாட்டின் படி தெய்வத்தின் குமாரர்கள் ஆவர்.

அதியாகமம்: 6:2-4: தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரிய முள்ளவர்களென்று கண்டு...

பின்பு தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றபோது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களாவார்கள்

யாத்திராகமம் 4:22: ம்இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்ட புத்திரன்.

எரேமியா 31:9 இஸ்ரேவேலுக்கு நான் பிதாவாயிருக்கிறேன். எப்பிராயீம் என் சேஷ்டபுத்திரனாயிருக்கிறான்.

மத்தேயு 5:44-45 ம்உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்.

லூக்கா 3:38: ஏனோஸ் சேத்தின்குமாரன்: சேத் ஆதாமின் குமாரன்: ஆதாம் தேவனால் உண்டானவன்.

ரோமர் 8:14, எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.

சங்கீதம் 2:7, கர்த்தர் என்னை (தாவூதை) நோக்கி: நீர் என்னுடைய குமாரன்...

மேற்கண்ட வசனங்களிலிருந்து இயேசுவை மட்டும் தெய்வ குமாரன் என்று பைபிள் கூறவில்லை, பலரையும் கூறுகிறது என்று அறியமுடிகிறது. தேவனுடைய குமாரன் என்று இயேசு தம்மைக் கூறியதற்கான காரணத்தையும் கூறுகின்றது.

யோவான் 10:35,36: தேவவசனத்தைப் பெற்றுக் கொண்டவர்களைத் தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க, வேதவாக்கியமும் தவறாததாயிருக்க.

பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்ப பட்டும் இருக்கிற நான், என்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவதூஷணஞ் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?

கிறித்து தன் வாயினாலே தன்னை தேவபுத்திரன் என்று கூறிக்கொண்டது மிகவும் குறைவு ஆகும். பவுலின் கடிதங்களிலேயே தெய்வபுத்திரன் என்னும் பதம் அதிகம் காணப்படுகின்றன. சுவிசேஷங்கள் அதிகமாக காணப்படுவது இறுதியாக எழுதப்பட்ட யோவானின் சுவிசேஷத்தில் ஆகும். புதிய ஏற்பாட்டில் மனித குமாரன் என்னும் பதம் 63 முறையும், மனிதன் என்று 72 முறையும் கிறித்துவை குறிப்பிடுகிறது.

எனினும் திரித்துவத்தை நிலைநாட்ட, தேவகுமாரன் என்னும் அடைமொழியை இயேசுவுக்கு வழங்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டு,

King James Version லில் கையூடல் செய்யப்பட்டது. அதுவும் கூட கண்டுபிடிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

King James Version யோவான் 3:16:

"For God so loved the World. that he gave his only begotten son, that whosoever believeth in him should not perish, but have everlasting life." - K.J.V

கி.பி1611 -ல் வெளியான கிங் ஜேம்ஸ் வர்ஸனில் பல வசனங்கள் மூல பைபிளில் இல்லை என்று கண்டறிந்து, அவற்றை நீக்கம் செய்து விட்டு, ரிவைஸ்ட் ஸ்டேண்ட்டர்ட் வர்ஸன் என்னும் பைபிளை 1952லும் பின் 1971-லும் வெளியிட்டனர். அதில், begotten என்னும் பதம் இடைச் செறுகல் செய்யப்பட்டதாகும் என்று கண்டறிந்து நீக்கம் செய்து வெளியிட்டனர்.

Revised Statndard Version லி யோவான் 3:16

"For God so loved the world that he gave his only son. that who ever believes in him should not perish but have eternal life"

-R.S.V- (1971)

ஆனால் The Bible Society of India வெளியிட்ட தமிழ் பைபிளில் (1993)

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசு

வாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல்

நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி

இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்?“ என்று மொழிபெயர்த்து வைத்துள்ளனர்.

பழைய ஏற்பாடும் சரி, புதிய ஏற்பாடும் சரி, தேவகுமாரன் என்றால் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்னும் பொருளில்தான் குறிப்பிடுகின்றது.

### பரிசுத்த ஆத்மா:

திரித்துவத்தில் மூன்றாவது நபராக கணிக்கப்பட்டுள்ளது பரிசுத்த ஆத்மாவையேயாகும். பரிசுத்த ஆத்மாவிற்கு தெய்வீகத் தன்மையுண்டு இறை மதிப்பு உண்டு என்று பைபிள் கூறவேயில்லை. பரிசுத்த ஆத்மா என்றுபைபிளும் ரூஹுல் குத்தூஸ‘ என்று குர்ஆனும் அழைத்திருப்பது வானவர்களின் தலைவரான ஜிப்ரீலை (கப்ரீலை)யேயாகும். இதை பைபிள் மூலமாகவும் தெரிந்து கொள்ளலாம். இயேசுவின் தாய் மரியம் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமானாள் என்று மத்தேயு சுவிசேஷமும் கர்ப்பத்திற்கு பொறுப்பு கெப்ரேலே என்று லூக்கா சுவிசேஷமும் கூறுவதிலிருந்து இதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

மத்தேயு 1:18: இயேசு கிறிஸ்துவின் ஜனனத்தின் விவரமாவது அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவரு முன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது.

லூக்கா 1:26,27: ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன் கலிலேயாவிலுள்ள நாசரேத் என்னும் ஊரில், தாவீதின் வம்சத் தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையிடத்திற்கு தேவனாலே அனுப்பபட்டான்: அந்தக் கன்னிகையின் பேர் மரியாள்.

மரியத்திற்கு அருகே வந்தது கெப்ரேல் என்னும் வானவர் ஆவார்: மரியம் கர்ப்பமாகியது பரிசுத்த ஆத்மாவிலாகும். ஆக, கெப்ரேலும் பரிசுத்த ஆத்மாவும் ஒன்று என்பது தெளிவாகும்.

இயேசு முன்னறிவிப்பு செய்துள்ள சத்திய ஆவி வேறு ஆகும் பரிசுத்த ஆவியும், சத்திய ஆவியும் ஒன்று அல்ல. பரிசுத்த ஆவி இயேசுவின் காலத்திலும் இயேசுவின் காலத்திற்கு முன்பும் இருந்தது. இதை பைபிள் பல இடங்களில் கூறுகிறது.

மத்தேயு 3:16,17: ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப் போல இறங்கி , தம்மேல் வருகிறதைக் கண்டார்.

அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது,

இங்கே பிதாவும்-குமாரனும்-பரிசுத்த ஆவியும் ஆகிய மூன்றும், மூன்று என்று விளக்குவதோடு, இயேசுவின் முன்பே பரிசுத்த ஆத்மா இருந்தது என்றும் வருகின்றது. இனி சத்திய ஆவியானவர் தனக்குப்பின் வரக்கூடியவர் ஆவார் என்று இயேசு கூறியதாக பைபிள் கூறுவதைக் காண்போம்:

நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்! நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால், தோற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். (யோவான் 16:7)

பைபிள் கூறும் பரிசுத்த ஆத்மாவின் செயல்பாடுகள் தீர்க்கதரிசிகளோடும், அவர்களோடு தொடர்புடையவர்களிடமுமே வந்தது பவுல் கூற்றுப்படி பெந்தகோஸ்து தினத்தில் வந்து செல்லும் ஆவியின் செயல்பாடுகள் அப்போஸ்தலர்களிடமோ கிறித்துவின் சீடர்களிடமோ. வந்தது. ஆனால் கிறித்து கூறும் சத்திய ஆவி, ம்அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்தும் உணர்த்துவார். யோவான் 16:8

சத்திய ஆவியாகிய அவர்வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்“ (யோவான்16:13) என்றுள்ளது.

பரிசுத்த ஆவி தெய்வமாகும் என்று பைபிளில் ஓர் இடத்திலும் கூறப்படவேயில்லை. இயேசுவிற்குப்பின் வரும் சத்திய ஆவி பரிசுத்த ஆவி அல்ல என்பதும், திரித்துவத்தில் மூன்றாவது ஆளாக கருதப்பட்டு வரும், பரிசுத்த ஆவிக்கு தெய்வீகத் தன்மை இல்லை என்பதும் இதிலிருந்து தெளிவாகிறது.

### 5. திரித்துவம் தூக்கி எறியப்பட்டது ஏன்?

18-ம் நூற்றாடின் இறுதியில் வாழ்ந்த ஒரு முஜாஹிதீன் சனாவுல்லா மக்தி தங்கள் என்பவர். குர்ஆனிலும், ஹதீஸிலும் சிறந்த ஞானம் பெற்றிருந்ததோடு: இந்து வேதங்களிலும், பைபிளிலும் நல்ல ஞான முடையவராக இருந்தார். கேரளாவில் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இவர் உலக முஸ்லிம்களே

பெருமிதம் கொள்ளும் வகையில்ஒரு காரியம் செய்தார். அது குறித்துதான் எழுதிய, ம்கடோர சசூடாரம் என்னும் நூலில் கூறுகிறார்.

பைபிளில் திரித்துவ நம்பிக்கைக்கு ஆதாரமாக கூறப்படுகிற ஒ யோவான் 5:7 வசனம் ஆதாரமற்றது, இந்த வசனம் இடைச்செறுகல் என்று ஸ்கோட்டு என்பவர், ஆக்ஸ் போர்டில் அச்சிட்டு வெளியாக்கிய தன்னுடைய வியாக்யான நூல் 3-ம் பாகம் 433-ம் பக்கத்திலும், இங்கிலாந்தின் மகா வித்வான்களாகிய நியூட்டன் , ஹிப்பன் போன்றோர்களின் நூல்களை ஆராய்ந்தாலும் இவ்வசனம் இடைச் செறுகள் செய்யப்பட்டது என்றும், மேலும் நிச்சயமாக தெரிந்துகொள்ள ஜான் டெவன் போர்ட் என்பவர் எழுதிய நூலில் 388-ம் பக்கத்திலும் எழுதியுள்ளதை கண்டு கொள்ளுங்கள். இப்படிப்பட்ட இடைச்செறுகல் செய்யப்பட்ட வசனங்கள் உங்கள் பைபிளில் பல உண்டு

(முக்தி தங்களுடைய பரிபூரண கிருதிகள் - பக்கம் 91)

(ஆதாரம்: கிறிஸ்தவ தெய்வ சங்கல்பம் இஹ் ஙு.ஙு. அக்பர்)

சனாவுல்லா முக்தி தங்களின் இத்தகைய விமர்சனங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தத்தளித்த கேரள கிறித்தவ தலைமைத்துவம் அவரின் வாழ் நாளிலே அவ்வசனத்தை நீக்கம் செய்தது. 1912 க்கு முன்பு வெளியான மலையாள பைபிளிலே I யோவான் 5:7 வசனம் நீக்கம் செய்யப்பட்டது.

இதுப்பற்றி மக்தி தங்கள் எழுதிய, ம்மக்தி தங்களின் ஆகோஷம்‘ என்னும் நூலில் கூறுகிறார்.

மூன்றும் ஒன்றான தெய்வம் என்றிருந்த வசனத்தை (I யோவான் 5:7) கிறித்தவ பண்டிதர்களைக் கொண்டே நீக்கம் செய்தோம்.

இதைவிட ஒரு வெற்றி இஸ்லாம் மார்க்கத்திற்கு ஏற்படாது.

இதைவிட பெரிய ஒரு மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி இஸ்லாமி யர்களுக்கு ஏற்படுவதில்லை என்பதை அறிந்தவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். மூடவர்கள் சந்தேகிப்பார்கள்

நான் எழுதி வெளியிட்ட நூல்களையும் விளம்பரங்களையும் படித்து அறிந்து, இஸ்லாமிய இளைஞர்கள் மட்டுமல்ல, இந்துக்களும் கூட கிறித்தவர்களை எதிர்த்து வாதிட்டு வெற்றிபெற்று வருகின்றார்கள்: இதுவும் பெரிய மகிழ்ச்சியான விசயமே

(ஆதாரம்: K.K. முஹம்மது அப்துல் கரீம் எழுதிய மக்தி தம் ஜீவ சரித்திரம்: பக்கம் 65)

(K.J.V - KING JAMES VERSON கிங் ஜேம்ஸ் வர்ஷன்)

கிங் ஜேம்ஸின் கட்டளையின் பிரகாரம் 1604-ல் 54 அறிஞர்கள் ஒன்றுகூடி ஒரு பைபிளை உருவாக்கத் துவங்கினர். அது எல்லோராலும் அங்கீகரிக்கப்படவேண்டும் என்பது நோக்கமாக இருந்தது. சில ஆண்டுகளின் உழைப்பிற்குப் பின் 1611-ல் அந்த பைபிள் வெளியானது. எளிமையான ஆங்கிலத்தில் நல்ல இலக்கிய நடையில்அமைந்த இந்த பைபிளே கிங் ஜேம்ஸ் பைபிள். இந்த பைபிள் இன்றுவரை அப்படியே வெளியிடப்படுகிறது.

வெளியீடு: Word Publishing, Grand Rapids, Michigan 4918. U. S. A

R.S.V ...REVISED STANDARD VERSION ரிவைஸ்டு ஸ்டேண்டர்ட் வர்ஷன்)

66 நூல்களை கொண்ட ஒரு பைபிளை 32 அறிஞர்கள் ஒன்று கூடி வெளியிட்டனர். அதாவது கிங்ஜேம்ஸ் வர்சனின் பல தவறுகள் உள்ளன என்பதை பத்தொன்பதாம் நூற்றாண்டின் மையங்களின் அறிஞர்கள் அறிந்தனர். இந்த தவறுகளும் சாதாரண தவறுகளாக இல்லாமல், கடுமையானதாக இருப்பதாக அவர்களே கூறுகின்றனர். கிங்ஜேம்ஸ் வர்ஷனை விட முந்தைய பழைய கையெழுத்து பிரதிகளை

கண்டுபிடித்ததால், அவைகளின் அடிப்படையில் கையுடல் செய்யப் பட்டதாக கருதப்பட்ட வசனங்களை நீக்கி வெளியிட்ட பைபிள் ஆகும். ரிவைஸ்டு ஸ்டேண்டர்டு வர்ஷன். இது 1971-ல் வெளியானது பின்னும் சரிபார்க்கப்பட்டு ஆதாரமானது என்று முடிவெடுத்து, 1952-ல் வெளியிட்டனர். (பார்க்க பக்கம் R.S.V-Preface

வெளியீடு: ABS- AMERICAN BIBLE SOCIETY NEW YORK. N.S.R.V:

THE NEW REVISED STANDARD VERSION தி நியூ ரிவைஸ்டு ஸ்டேண்டர்டு வெர்ஷன்.

அமெரிக்கா மற்றும் கனடாவைச் சேர்ந்த கத்தோலிக்க அறிஞர்கள் சிலர் ஒன்றுகூடி, வெளியிட்ட ஒரு பைபிள்தான் தி நியூ ரிவைஸ்டு ஸ்டேண்டர்டு வெர்ஷன். இதன் முதல்பதிப்பு 1990-ல் வெளியானது. இதில் புரோட்டஸ்டண்டுகள் சந்தேகத்திற்குரியது என்று கூறும் 7 நூல்களும் கூட இடம் பெற்று 73 நூல்களை கொண்டுள்ளது.

இந்தியாவில் வெளியீடு செய்தவர்கள்:

Theological Publications in India, Bangalore 560055.

I யோவான் 5:7

1611-ல் வெளியான கிங் ஜேம்ஸ் வர்ஸனின் பல தவறுகளும் இடைச்செறுகலும் இருப்பதாக ஆங்காங்கே அறிஞர்கள் பலர் கூறியதை செவிமடுத்த கிறித்தவ உலகம் கிங்ஜேம்ஸ் எவர்ஸன் வெளியான 326 ஆண்டுகளுக்குப் பின் அதாவது 1937-ல் ஒய்ற்ங்ழ்ய்ஹற்ண்ர்ய்ஹப் ஈர்ன்ய்ஸ்ரீண்ப் ர்ச் தங்ப்ண்ஞ்ண்ர்ன்ள் ஊக்ன்ஸ்ரீஹற்ண்ர்ய் ஒரு குழுவை நியமித்தது. கிங்ஜேம்ஸ் வர்ஸனில் பல தவறுகள் இடைச்செறுகள் உள்ளது என்று கண்டறிந்த அந்த குழு, தவறுகளை திருத்தி இடைச்செறுகல்களை தூக்கி எறிந்து விட்டு, வெளியிட்ட புதிய பைபிள் தான் ரிவைஸ்டு ஸ்டேண்டர்ன் வர்ஸன். இந்த ரிவைண்டு ஸ்டாண்டர்டு வர்ஸனில் திரித்துவத்திற்கு ஒரே ஆதாரமாக கருதப்பட்டு வந்த ஒ யோவான் 5:7 வசனமானது இடைச் செறுகலாகும் என்று கூறி தூக்கியெறிந்தது. அந்த வசனம் இதுவாகும்.

"For there are three that bear record

in heaven. the father. the word and the

Holy Ghost and these three are one"

இவ்வசனம் (K.J.V) இங்ஜேம்ஸ் வர்ஸனில் இருக்கும் (R.S.V) லி ரிவைஸ்டு ஸ்டாண்டர்டு வர்ஸனில் இருக்காது. திண்டிவனத்திலிருந்து வெளியான R C பைபிளில் இருக்காது. பெங்களூரிலிருந்து வெளியான (N.R.S.V) தி நியூ ரிவைஸ்டு ஸ்டாண்டர்டு வர்ஸனில் அடிக்குறிப்பில் இந்த வசனத்தை பிரசுரித்துள்ளார்கள். தமிழ் பைபிளிலோ திரும்பவும் சேர்த்திருக்கிறார்கள். அதாவது ஒ யோவான் 5:7 வசனம் K.J.V. ல் இடைச்செறுகல் செய்யப்பட்டதாகும் என்று கூற அதை R.S.V. யில் தூக்கியெறிந்தார்கள். பின் N.R.S.V யில் அடிக்குறிப்பில் பதிவு செய்தார்கள். The Bible society of India வெளியிட்ட பரிசுத்த வேதாகமத்தில் அடைப்புக்குறிப்புக்குள் வெளியிட்டுள்ளார்கள். இன்னும் சில காலத்தில் அடைப்புக் குறி நீக்கப்பட்டுவிடும் என்று தாராளமாக கூறலாம்.

(பார்க்க பைபிள் பக்கங்கள்)

### 6. திரித்துவத்துக்கு வேதாகம அத்தாட்சிகள்?

பிதா - குமாரன் - பரிசுத்த ஆவி இம்மூன்றும் ஒன்றாயிருக்கிறது என்னும் திரித்துவ கொள்கைக்கு பைபிளிலே கூட ஆதாரம் இல்லை என்று கூறியபோது, இல்லை, இருக்கவே செய்கிறது என்பது

அவர்கள் வாதம். அவர்கள் காட்டும் அந்த ஆதாரங்கள் எத்தகையது என்பதை ஒவ்வொன்றாகக் காண்போம்.

ஆதாரம்-1

பழைய ஏற்பாட்டில் தேவன் நா என்று கூறுவது பன்மையைக் குறிக்கிறது. அது திரித்துவத்திற்கு ஆதாரமாகும். உதாரணத்திற்கு ஆதியாகமம் நூலில் 1:26-லும் 3:22 லும் 11:7லும், நாம் என்னும் பதத்தைக் காணலாம். அது மட்டுமல்ல, திருக்குர்ஆனில் கூட அல்லாஹ் தன்னை நாம்' என்று கூறுகின்றானே (திருக்குர்ஆன் 50:16,15:9) இன்னும் ஆதியாகமத்தில் அதிகாரம்-1 முதல்வசனத்தில் ம்ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் என்றுள்ளது. இங்கு தேவன் என்று மொழி பெயர்க்கப்பட்டது. எவோஹிம்" என்னும் ஹிப்ரு பதத்தையேயாகும். எல்-தேவன் என்னும் பதத்தின் பன்மைப் பதமாகும். ஆகவே இதுவும் திரித்துவத்தின் ஆதாரம் ஆகும்.

திரித்துவம் தான் இறைக்கொள்கை - திரித்துவத்தை நம்பாதவர்கள், ஏற்றுக் கொள்ளாதவர்கள் நித்தியஜீவனை அடைய முடியாது என்றால், அந்த கொள்கையை ஆதி மனிதர் ஆதம் துவங்கி, இறைவனால் அனுப்பட்ட எல்ல இறைத்தூதர்களும் அதாவது எல்லா தீர்க்கதரிசிகளும் கூறியிருப்பார்களே. ஆனால் திரித்துவம் என்னும் பதம் கூட எந்த தீர்க்கதரிசியும் உபயோகப்படுத்தியதாக பைபிளில் இல்லையே?

நாம்' என்னும் பதம் திரித்துவத்திற்குரிய ஆதாரம் என்று எந்த தீர்க்கதரிசியும் கூறியதாக எந்தவொரு ஆதாரமும் பைபிளில் இல்லையே? புனித பவுல் கூட நாம்' என்னும் பதம் திரித்துவத்திற்குரிய ஆதாரம் என்று கூறியதில்லையே?

திரித்துவம் தான் தெய்வீகத் தன்மையின் முழுமை. அதுவே மெய்ப்பொருள். ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் மூன்றில் ஒன்று என்றிருந்தால், அத்தகைய தத்துவத்தை சொர்க்கத்திற்குரிய வழிகாட்டுதலை இயேசு உட்பட எல்லா தீர்க்க தரிசிகளும் மறைத்து வைத்தது ஏன்?

இயேசு கிறித்து தெய்வத்தின் மூன்று அம்சங்களில் ஒன்றாயிருந்தால், கிறித்துவின் பிரார்த்தனைகளில் ஒன்றில் கூட தன்னையும் உட்கொள்ளும் விதத்தில் நாம்' என்னும் பதம் உபயோகப்படுத்ததாதன் காரணம் என்ன?

மனித சமூகத்தையே இரட்சிக்கும் விதமாக சிலுவையில் கிடக்கும் போதும் கூட தேவனே தேவனே நீ ஏன் என்னை கைவிட்டாய்" என்றே கேட்டார். இயேசு, தான் செய்த பிராத்தனைகள் எல்லாவற்றிலும் நான்ம் நீ உன் என்னும் பதத்தையே உபயோகப் படுத்தியுள்ளார். திரித்துவத்தில் ஒருவர் என்றிருந்தால், நாம்' நம்முடைய' நமக்கு' என்னும் பதங்களையே உபயோகப்படுத்தியிருப்பார். பின் நாம்' என்னும் பதத்தை குர்ஆனிலும் பைபிளிலும் கர்த்தர் சுயமாக உபயோகப்படுத்தியது எதற்காக?

தன்னுடைய எல்லா குணாதிசயங்களிலும் ஏகத்துவத்தை பறை சாற்றும் இறைவன், நாம்' என்னும் பதத்தை உபயோகப்படுத்தியது ஏன் என்று பார்போமானால், நாம்' என்னும் பதம் பன்மையை மட்டும் குறிக்கும் எல்லா இடத்திலும் பயன்படுத்தப்படுவதில்லை. புகழுக்காகவும் புகழ்வதற்காகவும் பயன்படுத்தப்படுவதுண்டு. தன்னைத்தானே சுயமாக புகழவும் நாம் என்று கூறுவதுண்டு. அவ்வாறு நாம்' என்று கூறுவதால் பன்மை குடிகொண்டுள்ளதாக யாரும் கருதுவது கிடையாது. குன்னக்குடி அடிகள், விவேகானந்த சுவாமிகள் என்றெல்லாம் கூறப்படுகிறது. புகழ் சேர்க்கவே அவ்வாறு அழைக்கப்படுகிறது. பல குன்னக்குடி அடிகள், பல விவேகானந்தர் சுவாமிகள் என்னும் அடிப்படையில் அல்ல. அந்நிலையில் நாம்' என்னும் பதமும் பன்மையை குறிக்க அல்ல புகழ்ச் சிக்காகவே

கூறப்படுகிறது. ஏக இறைவனாகிய சிருஷ்டிகர்த்தாவாகிய அல்லாஹ்வைவிட புகழுக்குரியவன் எவர் இருக்கின்றார்கள்?.

திருக்குர்ஆனில் இறைவனைப் புகழவே நாம்‘ உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. அதுபோல் யூதர்களும் தேவனை புகழ்வதில் நாம்‘ என்னும் பதத்தை உபயோகப்படுத்தினார்கள். இது பகுத்துவத்தையோ திரித்துவத்தையோ குறிக்க அல்ல.

ஆதாரம் 2

மத்தேயு 28:19 -ல், பிதா-குமாரன்-பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்ஞானம் கொடுத்து...“ என்று வருகிறது. இதில் பிதா - குமாரன் - பரிசுத்த ஆவியின் நாமங்களில் என்று வராமல், நாமத்தில் என்று வந்துள்ளதே. இது பன்மை ஒருமையில் உள்ளது என்பதற்கு, மூன்றும் ஒன்றாக உள்ளது என்பதற்கு ஆதாரம் ஆகும் என்கின்றனர்.

இதுமொழி பிரயோகத்தில் ஏற்பட்ட சிறு தவறோ அல்லது வழக்கு மொழி பிரயோகம் என்றே சொல்ல வேண்டும். இதே போன்ற இடங்கள் பைபிளில் பல உள்ளன.

ஆதியாகமம் 2:19 - ல் தேவனாகிய கர்த்தர் வெளியில் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவித பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவற்றிற்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவற்றை அவனிடத்தில் கொண்டு வந்தார். அந்தந்த ஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று.

இவ்வசனத்தில் இலக்கணப்படி, ம்அவற்றிற்கு என்ன பெயர்கள் என்று வரவேண்டும் ஆனால் அவற்றிற்கு என்ன பெயர் என்று வந்துள்ளதால் எல்லா காட்டு, நாட்டு மிருகங்களும், பறவைகளும் ஒன்றே என்று சுவிசேஷ விசுவாசிகள் பொருள் கொள்வார்களா?

மத்தேயு 28:19 - ன் படி, மூன்றும் ஒன்று என்றால், ஆதியாகமம் 2:19-ன் படி எல்லா பறவைகளும் மிருகங்களும் ஒன்றே என்று பொருள் கொள்ள வேண்டும். அதாவது 28:19 திரித்துவத்திற்கு ஆதாரம் என்றால் 2:19 ன் படி பகு ஏகத்துவம் (Poloynity) உண்டு என்று சம்மதிக்க வேண்டும்.

ஆக, பிதா குமாரன் பரிசுத்த ஆவி இம்மூன்றும் ஒன்று என்பதற்கு பைபிளில் எடுத்துக்காட்டப்பட்ட ஏக வசனமும் திரித்துவத்திற்கு ஆதாரமாகாது என்பது தெளிவு.

ஆதாரம் - 3

யோவான் 1:1.2-ல் ம்ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது, அவர் ஆதியிலே தேவனோடிருந்தார், என்றுள்ளது. வார்த்தை என்பது இயேசுவை குறிப்பதாகும். ஆகவே, இயேசுவும் தேவனும் ஒன்று என்பதற்கு இவ்வசனம் ஆதாரமாகும் என்கின்றனர்.

இவ்வசனம் கிரேக்க மொழியில்லிருக்கும் போது, தேவன்‘ என்னும் பதம் இடம்பெறும் இடத்தில் HOTHEOS (ஹோதியோஸ்) என்றிருந்தது. அதை ஆங்கிலத்தில் God என்று மொழிபெயர்த்தார்கள். God என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள இடங்களில் கிரேக்க மொழியில் THONTHEOS என்றிருக்கும்.

HOTHEOS = GOD

THONTHEOS = god

Thontheos (டோன்தியோஸ்) என்னும் பதம் பொதுவாக எல்லோருக்கும் உபயோகப்படுத்தும் வசனம் ஆகும். Thontheos என்னும் பதம் பிரபஞ்சத்தை படைத்த கர்த்தரை குறிக்க மட்டுமே பயன்படுத்தப்படும். பைபிளில் எங்குமே HOTHEOS என்னும் பதம் இயேசுவையோ, பரிசுத்த ஆவியையோ குறிக்க பயன்படுத்தப்பட்டதில்லை. Thontheos (டோன் தியோஸ்) என்னும் பதம் தீர்க்க தரிசிகளுக்கு, மட்டுமல்ல சைத்தானுக்கும் கூட பயன்படுத்தப்பட்டுள்ளது.

கர்த்தர் மோசேயை நோக்கி, பார் உன்னை நான் பார்வோனுக்கு தேவனாக்கினேன். உன் சகோதரனாகிய ஆரோன் உன் தீர்க்கதரிசியாக இருப்பான். (யாத்திராகமம் 7:1)

And the lord said unto Moses, See I have made thee a god to pharaoh and Aaron thy brother shall be Thy prophet (Exodus 7:1)

தேவனுடைய சாயலாயிருக்கிற கிருத்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி விசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராத படிக்கு, இப் பிரபஞ்சத்தின் தேவனானவன் (சாத்தான்) அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். (II கொரிந்தியர் 4:4)

In the whom the god of this world hath blinded the minds of them which believe not, lest the light of the Glorious Gospel of christ, who is the image of God should shine un to them(II cor 4:4)

மேற்சொன்ன வசனங்களில் ஏர்க்லிக்கு ஐர்றட்ங்ன்ள் என்றும், god- க்கு Thonthcos என்றும், கிரேக்கில் இரு வேறுபதங்கள் இருக்கிறது. ஆங்கிலத்தில் ஒரே பதம் மட்டுமே போட்டு குழப்புவது போன்றுதான் யோவான் தன்னுடைய சுவிசேஷத்தில் இலக்கிய நயத்தை வெளிப்படுத்த கிரேக்க தத்துவசாஸ்திர பதங்களைப் போட்டுக் குழப்பியுள்ளார்.

இவ்வசனத்துடன் துவங்கும் யோவான் சுவிசேஷமானது இயேசுவின் காலத்தில் எழுதப்பட்டதல்ல. இயேசுவின் அப்போஸ்தலர் எழுதியதுமல்ல. இயேசுவின் அப்போஸ்தலர்களில் யோவான் என்னும் பெயரில் மீனவன் ஒருவன் உண்டு. அந்த யோவான் எழுதியதும் அல்ல. இந்த சுவிசேஷம் எழுதப்பட்டது கி.பி 80-க்கும் பின்பு ஆகும். மிக உயர்ந்த கிரேக்க இலக்கிய நயத்தில் இந்த சுவிசேஷம் அமைந்துள்ளது இயேசுவுக்கும் இயேசுவின் அப்போஸ்தவராக இருந்த மீனவன் யோவானுக்கும், கிரேக்க லத்தீன் மொழி தெரியாது. மிக முக்கியமாக யோவான் சுவிசேஷம் எழுதியது யார் என்றே தெரியாது, என்று பெரும்பான்மையான பைபிள் அறிஞர்கள் கூறுகின்றார்கள்.’

மிக முக்கியமாக யோவான் 1:1,2 வசனங்கள், கர்த்தரின் வாக்கு என்றோ இயேசுவின் வாக்கு என்றோ கூறவில்லை. இலக்கிய நயம் சேர்க்க யோவானின் கற்பனையில் உருவான வசனங்களே அது என்பது தெளிவு.

யாரென்றே தெரியாதவரின் கற்பனையில் தோன்றியது எப்படி கடவுள் கொள்கைக்கு ஆதாரமாக கொள்ளமுடியும்?

3. திருக்குர்ஆன் கூறுகிறது:

ஜகரிய்யா (அலை) அவர்கள் மிஹ்ராப் எனும் மாடத்தினுள் நின்று தொழுது கொண்டு இருந்தபோது, வானவர்கள் குரல் கொடுத்தார்கள்.

அல்லாஹ் உமக்கு யஹ்யா (என்றமக) வைக் கொண்டு நிச்சயமாக நற்செய்தி சொல்கிறான். அவர் அல்லாஹ்விடம் இருந்து வரப் போகும் ஒரு வாக்கினை, மெய்படுத்தக் கூடியவராக விளங்குவார். அத்துடன், அவரிடம் தலைமைத்துவம் மற்றும் மகத்துவத்தின் பண்புகள் காணப்படும். மனக்கட்டுபாடு கொண்டவராகவும் இருப்பார். நபித்துவம் அருளப்பட்டவராகவும் இருப்பார். மேலும், ஒழுக்கசீலர்களில் ஒருவராகவும் திகழ்வார்.“ (திருக்குர்ஆன் 3-39)

வானவர்கள் இவ்வாறு கூறியதை நினைவுகூருங்கள், மர்யமே! திண்ணமாக அல்லாஹ் உமக்கு தன் கட்டளைப் பற்றி செய்தி சொல்கின்றான். அதன் பெயர் மர்யத்தின் குமாரர் ஈஸா - அல் மஸீஹ்‘ என்பதாகும்.

அவர் இம்மையிலும், மறுமையிலும் கண்ணிய மிக்கவராகவும், அல்லாஹ்விடம் நெருங்கிய நல்லடியார்களில் ஒருவராகவும் திகழ்வார்.“ (திருக்குர்ஆன் (3:45)

மேற்சொன்ன திருமறைவசனங்களில் அல்லாஹ் இயேசு கிறித்துவை அல்லாஹ்விடமிருந்து வந்த வார்த்தை என்று வர்ணிக்கின்றான். இந்தக் கருத்துக்கு பொருத்தமான கருத்தை பவுல் கொரிந்தியருக்கு எழுதிய மடலிலும் கூறியிருக்கிறார்.

நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள். கிறிஸ்து தேவனுடையவர் (I கொரிந்தியர் 3:23)

திருக்குர்ஆனின் கூற்றிற்கு, பவுலின் நிரூபம் பொருந்திப்போகும் வகையில், யோவான் 1:1 வசனம் இவ்வாறு பதியப்பட்டிருக்க வேண்டும்.

ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலேயிருந்தது. அந்த வார்த்தை தேவனுடையதாயிருந்தது ஆனால், யோவான் 1:1 - வசனமானது அந்த வார்த்தை தேவனாயிருந்தது என்று கூறுவதால், மொழிபெயர்ப்பில் ஏற்பட்ட குறைபாடாக இருக்கவேண்டும். அரபி மொழியில் இருந்து கிரேக்க மொழிக்கு பெயர்த்து எழுதியபோது இந்த குறைபாடு ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது காரணம் கிரேக்க மொழியில் தியோஸ் (Theou) என்றால், தேவனுடையதும் என்று பொருளாகும்.

மாறாக, ம்அந்த வார்த்தை தேவனாயிருந்தது“ என்பதே சரி, என்று வாதிப்பார்களானால், அது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் கூறுவதற்கு முரணாகிறது.

இஸ்ரவேலே, கேள்! நம்முடைய தேவனாகிய கர்த்தர், ஒருவரே கர்த்தர். (மாற்கு 12:29)

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிற விசயத்தைப் பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும்: ஒருவரேயன்றி, வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம்“ (I கொரிந்தியர் 8:4)

தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே.

எல்லோரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே: I தி மோத்தேயு 2:5-6

இயேசு தேவனாக இருக்கவில்லை மனிதனாகவே இருந்தார். இறைவன் ஒருவனே. அவனே தேவன். ஆகவே யோவான் 1:1 வசனத்தின் மொழி பெயர்ப்பில் தவறு ஏற்பட்டிருக்கவேண்டும். மொழிபெயர்ப்பு சரிதான் என்றாலும், இதை அடிப்படை ஆதாரமாக கொள்ள முடியாது. காரணம் இது கர்த்தருடைய வார்த்தையோ, இயேசுவுடைய வார்த்தையோ அல்ல. சுவிசேஷ ஆசிரியரின் சொந்த வார்த்தையாகும்.

ஆதாரம்: 4

ஏசாயா 7:14 - ல், ம்ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார். இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் என்றுள்ளது. இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார். என்பது பொருள் என்று மத்தேயு 1:83 கூறுகிறது, ஆகவே, தேவனும் இயேசுவும் ஒன்றாக இருக்கிறார்கள் என்பதற்கு இது ஆதாரம் ஆகும் என்கின்றனர்.

ஏசாயா 7:14 வசனத்தில் கன்னிகை என்று தமிழிலும் VIRGIN என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பதத்தின் ஹிப்ரு மூலம் அல்மா (Almah) என்பதாகும்.. ஆனால், அல்மா என்னும் பதத்தின் நேரடி பொருள் பெண்ம் ஆகும். கன்னிகை (VIRGIN) என்பதற்கு ஹிப்ருவில் "BETHULA" என்பதாகும்.

இரண்டாவது, இம்மானுவேல்ம் என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்பது பொருளாயிருந்தாலும், அது இயேசுவுக்கு பொருந்தாது, காரணம். இயேசுவின் வாழ்நாளில் யாரும் அவரை இம்மானு வேல் என்று அழைத்தது கிடையாது.

II சாமுவேல் 5:10 வசனமானது, தாவீது நாளுக்கு நாள் விருத்தியடைந்தான்: சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடு கூட இருந்தார். என்கிறது.

ஆகவே, தேவன் நம்மோடு இருக்கிறார்“ என்னும் வசனம் திரித்துவத்திற்கு ஆதாரம் என்றால், திரித்துவ பட்டியலுக்குள் தாவீதையும்: ஏசாயா கூறும் எங்களையும் இணைக்க வேண்டியது வரும். அப்போது அங்கே திரித்துவம் இருக்காது (பகுத்துவம்) பலதெய்வங்கள் தாம் இருக்கும்.

ஆதாரம்: 5

யோவான் 10:30-ல் நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்று இயேசு கூறியிருக்கின்றாரே இது திரித்துவத்திற்கு ஒரு ஆதாரம் அல்லவா? என்கின்றனர்.

இவ்வசனம் என்ன அடிப்படையில் கூறப்பட்டது என காண்போம்.

என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன். அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை, அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார். அவைகளை என்பிதாவின் கையிலிருந்து பறித்துக் கொள்ள ஒருவனாலும் கூடாது. நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்.“ (யோவான் 10:27-30)

இங்கே நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்னும் பதம் உபயோகப்பட்டது நாங்கள் இருவரும் ஒரே ஸத்தையில் அல்லது மெய்ப்பொருளில் அல்லது தன்மையில் ஆனவர்கள் என்னும் பொருளிலா என்றால் இல்லை. நாங்கள் இரண்டுபேரும் ஒன்று என்று சாதாரணமாக ஐக்கியத்தை குறிக்க குறிப்பிடும் ரீதியிலே இவ்வார்த்தைப் பிரயோகம் அமைந்துள்ளது. அவ்வசனத்திலே ஆடுகளை எனக்குத் தந்த என் பிதா எல்லோரிலும் பெரியவராயிருக்கிறார்: என்று தெளிவாக இறைவனைத் தனிமைப்படுத்தி: நேர்மைப்படுத்தி: ஏகத்துவத்தை நிலை நிறுத்தியுள்ளார்.“

இன்னும் யோவான், 17:21- ம்பிதாவே! நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல, அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்“ என்று இயேசு பிரார்த்திக்கிறார்.

யோவான் 10:30 ல் கூறப்பட்டுள்ள பிதாவும் நானும் ஒன்றாயிருக்கிறேன் என்று கூறியது, இருவரும் தன்மையில் ஒன்றாயிருக்கிறார்கள் என்று வாதித்தால், யோவான் 17:21 -ன் படி அவர்கள் எல்லாம் நம்மில் ஒன்றாயிருக்கவும் என்று கூறுவது கர்த்தரும் இயேசுவும் தன்மையில் ஒன்றாயிருப்பதுடன், சீடர்களும் சேர்ந்து எல்லோரும் ஒன்றி இருக்கிறார்கள் என்று வாதிக்க வேண்டியது வரும். இயேசுவும் தேவனும் ஒன்றானதினால் கிறித்து தெய்வமென்றால் சீடர்களும் தெய்வமாகின்றார்கள். அப்போது

பிதாவும், குமாரனும், பரிசுத்த ஆவியும் , 12 சீடர்களும் சேர்ந்து மொத்தம் 15 பேர்கள் அடங்கிய ஏகத்துவ தெய்வமாகிவிடும்.

ஆதாரம் 6

மத்தேயு 3:16,17 வசனங்களில், இயேசு ஞானஸ்ஞானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைக் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.

அன்றியும் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது"

இவ்வசனம் திரித்துவத்திற்கு ஓர் ஆதாரமாகும் என்கின்றனர்.

உண்மையில் இந்த வசனம் திரித்துவத்திற்கு ஆதாரமல்ல, திரித்துவத்தை எதிர்க்கின்ற வசனமாகும். மூன்றும் மூன்று விதங்களில் இருப்பது திரித்துவத்திற்கு எதிரானதாகும்.

1. குமாரன் ஸ்நானம் செய்துவிட்டு கரையேறுகிறார்.

2, பரிசுத்த ஆவி புறாவைப் போல இறங்கி வருகிறது.

3. பிதா சுவர்க்கத்திலிருக்கிறார்.

மூன்றும் மூன்று நிலைகளில் - மூன்று இடங்களில் இருக்கிறது. அதாவது, மூன்றும் ஒன்றாயிருக்கிறது என்னும் நம்பிக்கையை தகர்க்கிறது.

அடுத்து வானத்திலிருந்து ஓர் அசரீரி, ம்இவர் என்னுடைய நேசகுமாரன்' என்று கூறினால், அது இயேசு தெய்வீகத் தன்மை உடையவர் என்பதற்கு ஆதாரம் என்றால் கர்த்தருடன் நேரடியாக சண்டையிட்டு, அதில் வெற்றிபெற்ற யாகோபை (அதியாகமம் 32:28) பிதாவுக்கும் குமாரனுக்கும் மேலாக திரித்துவத்திற்கும் மேலாக அல்லவா வைக்க வேண்டும்?

ஆனால், இதையெல்லாம் அறிந்த அப்போஸ்தலர் இயேசுவை என்ன நிலையில் வைத்திருந்தார் என்பதை அப்போஸ்தலர் நடபடிகள் 3:13 இவ்வாறு கூறுகிறது:

அபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய

தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன் தம்முடைய

பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார்.

ஆதாரம் 7

யோவான் 8:58: அதற்கு இயேசு: அபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே. மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். என்றிருக்கிறது. இது இயேசு ஆதியிலே தேவனோடு இருந்தார் என்பதற்கு ஆதாரம் ஆகும் என்கின்றனர்.

பிறந்த பாலகன் அல்லது 33 வயதான வாலிபரான இயேசு முதியவரான ஆபிரகாமுக்கு முன்பே இருந்தார் என்றால், எந்த அடிப்படையில் என்பதை அறிவதற்கு முன்னால் எரேமியா நூல் கூறுவதைக் காண்போம்

கர்த்தர், நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்: நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்க தரிசியாகக் கட்டைளையிட்டேன் என்று சொன்னார்." (எரேமியா 1: 5)

இவ்வசனமானது, இயேசுவின் ஜனனத்திற்கு முன்பே பிறந்த எரேமியா, பிறக்கும் முன்பே தீர்க்கதரிசியாக கர்த்தரிடத்தில் இருந்தார் என்று கூறுகிறது.

இனி சாலமன் கூறுவதைக் காண்போம்:

சாலமோனின் நீதிமொழிகள்: கர்த்தர் தம் கிரியைகளுக்கு முன் பூர்வமுதல் என்னைத் தம் வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார்.

பூமி உண்டாகு முன்னும், ஆதிமுதற் கொண்டும் அநாதியாய் நான் அபிஷேகம் பண்ணப்பட்டேன்.

ஆழங்களும், ஜலம் புரண்டுவரும் ஊற்றுகளும் உண்டாகுமுன்னே நான் ஜனிப்பிக்கப்பட்டேன்.

மலைகள் நிலைபெறுவதற்கு முன்னும், குன்றுகள் உண்டாவதற்கு முன்னும்,

அவர் பூமியையும் அதின் வெளிகளையும் பூமியிலுள்ள மண்ணின் திரள்களையும் உண்டாக்கு முன்னும் நான் ஜனிப்பிக்கப்பட்டேன்.

அவர் வானங்களைப் படைக்கையில் நான் அங்கே இருந்தேன், அவர் சமுத்திர விலாசத்தை வட்டணிக்கையிலும்,

உயரத்தில் மேகங்களை ஸ்தாபித்து, சமுத்திரத்தின் ஊற்றுகளை அடைத்து வைக்கையிலும்,

சமுத்திர ஜலம் தன் கரையை விட்டு மீறாதபடிக்கு அதற்கு எல்லையைக் கட்டளையிட்டு, பூமியின் அஸ்திபாரங்களை நிலைப் படுத்துகையிலும்,

நான் அவர் அருகே செல்லபிள்ளையாயிருந்தேன். நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து, எப்பொழுதும் அவர் சமுகத்தில் களிகூர்ந்தேன். அவருடைய பூவுலகத்தில் சந்தோஷப்பட்டு, மனு மக்களுடனே மகிழ்ந்து கொண்டிருந்தேன்.

நீதிமொழிகள் 8:22-31

என்று சாலமன் கூறுகிறதாக பைபிள் கூறுகிறதே? அபிரகாமுக்கு முன்பே இயேசு இருந்தார் என்பதும், இயேசுவும் தேவனும் ஒன்று என்பதற்கு ஆதாரம் என்றால், அபிரகாமுக்கு பிந்தைய சாலமன் வானம் பூமி படைக்கப்படுவதற்கு முன்பே இருந்தார் என்கிறதே? தேவனும் சாலமனும் கூட ஒன்று என்றாகிறது அல்லவா? இதனால், திரித்துவத்தில் சாலமோனையும் நுழைக்க வேண்டியது வரும் இதனை செய்வார்களா?

ஆதாரம்-8

யோவான் 14:8-10 கூறுகிறது: பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும். அது எங்களுக்குப் போதும் என்றான். “

அதற்கு இயேசு, பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னைத் தன்மையில் அறியவில்லையா? என்னைக் கண்டான் பிதாவைக் கண்டவன். அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை. என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்.

இவ்வசனம் கூட திரித்துவத்திற்கு ஆதாரம்காட்ட எடுத்து வைக்கப்படுகிறது.

இவ்வசனத்தில், என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் (யோவான் 14:9) என்று கூறியதற்கு காரணம், பிதாவைக் காண முடியாது. ஏனெனில்,

தேவன் ஆவியாயிருக்கிறார். (யோவான் 4:24) நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை யோவான் (5:37)

அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதிராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்,

ஒருவராய் சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராத வரும், காணக் கூடாதவருமாயிருக்கிறவர் I திமோத்தேயு 6:15,16

கர்த்தரைக் காணமுடியாது என்றால், கர்த்தர் இல்லையென்று ஆகிவிடாது. கர்த்தரால் படைக்கப்பட்ட படைப்பினங்களை ஆராயும் போது, கர்த்தர் உண்டு என்பதை அறிய முடியும். இறைவன் தன்னுடைய தெய்வீக வெளிப்பாடாகிய இறைவேதத்தின் மூலமும், இறைத்தூதர்களின் மூலமும் தன்னைக் குறித்து வெளியிடுகிறான். இயேசு இறைவனின் தூதர், இறைவனால் அனுப்பப்பட்டவர் என்னும் உண்மையை அறியும்போது, இறைவன் உண்டு என்பதை அறியலாம்

இஸ்ரவேலரே நான் சொல்லும் வார்த்தையைக் கேளுங்கள். நீங்கள் அறிந்திருக்கிறபடி, நாசரேயனாகிய இயசேுவைக் கொண்டு, தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்" (அப்போஸ்தலர் 2:22)

இறைவன் உண்டு என்பதற்கு ஆதாரமே இறைத்தூதரை ஏற்றுக்கொள்வதாகும். அந்த பொருளில்தான், என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்று கூறினார். இன்னும் இயேசு தன்னை கர்த்தர் என்றோ, நான் தான் பிதா என்றோ, இறைவனின் அம்சம் தன்மை தனக்கு உண்டு என்றோ உரிமை கோரியது கிடையாது. எல்லா சசூழ்நிலைகளிலும் தன்னை கடவுளின் தாசன் என்னும் நிலையில் இருந்து கொண்டு பிதாவிடம் உதவி தேடுபவராகவே இருந்தார்.

1. நான் தேவனுடைய ஆவியினாலேயே பிசாசுகளைத் துரத்துகிறபடியால்..." (மத்தேயு 12 : 28)

2, வானத்திலும் பூமியிலும் கசல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது." (மத்தேயு 28 : 18)

3. நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே..." (லூக்கா 11 : 20)

4, நான் என் சுயமாய் ஓன்று செய்கிறதில்லை..." யோவான் 5:30)

5, தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள்,.." (யோவான் 8:40)

6. நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை: அதைத்தேடி நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார்." (யோவான் 8:50)

7. நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்." (யோவான் 12:49)

இயேசு இறைத்தன்மை தனக்கு உண்டு என்று உரிமை கொண்டாடியது கிடையாது. எவராவது இறைத்தன்மை தனக்கு உண்டு என்று கூறுவதையும் பைபிள் தடை விதித்து உள்ளது.

மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாக இருப்பது எப்படி? ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் சுத்தமாயிருப்பது எப்படி?

சந்திரனை அண்ணாந்துபாரும், அதுவும் பிரகாசியாமலிருக்கிறது. நட்சத்திரங்களும் அவர் பார்வைக்குச் சுத்தமானவைகள் அல்ல.

புழுவாயிருக்கிற மனிதனும், பூச்சியாயிருக்கிற மனு புத்திரனும் எம்மாத்திரம் என்றான்.“ (யோபு 25:4-6)

மனுஷனுடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்.“ (மத்தேயு 15:9)

சுருக்கமாக கூறுவோமாமேயானால், பைபிளில் ஒரு வசனம் கூட திரித்துவத்திற்கு ஆதாரமாக இல்லை. ஆதாரமாக சமர்ப்பிக்கும் வசனங்களோ திரித்துவத்தை தகர்க்க கூடியதாக இருக்கிறது. ஆதிமனிதர் ஆதம் முதல் இயேசு வரைக்கும் வந்த தீர்க்கதரிசிகள் திரித்துவத்தை அறியக் கூட செய்யாதவர்கள். மொத்தத்தில் திரித்துவமானது அடிப்படை ஆதாரமற்றதும் அறிவுக்கு பொருத்தமற்றது. தெய்வீக கிரந்தம் என்று கருதப்படும் பைபிளில் முன்னுக்குப்பின் முரண்பாடுகளும், அதன் வார்த்தைப் பிரயோகங்களில் தெளிவின்மையும், எழுதியது யார் அல்லது தொகுத்தவர் யார்? என்பது பற்றிய விவரமும் இல்லாததினால், பைபிளின் அடிப்படையில் இயேசுவின் வரலாற்றையும் போதனையையும் தெளிவுடன் அறிய சாத்தியமில்லை. இவையெல்லாம் கருத்தில் கொண்டு, இயேசுவின் வரலாற்றை போதனைகளை நாம் தெளிவாக அறிய வேண்டு மென்றால், இன்றுள்ள ஒரே வழி இறைவனின் இறுதி வேதமான திருக்குர்ஆன் மட்டுமேயாகும்.

## திருக்குர்ஆனிலும் விவிலியத்திலும்

### 1. திருக்குர்ஆனிலும் விவிலியத்திலும் தீர்க்க தரிசனங்கள்

மனித சமூகம் நேரியமார்க்கத்தை விட்டு, வழிதவறும் போது: அவர்களை சீர்த்திருத்தி, நேர்வழியின் பக்கம் கொண்டு வர அல்லாஹ் தூதர்களை அனுப்பிவைக்கிறான். அந்த தூதர்கள் அனைவருடைய நோக்கமும் ஒன்றேயாகும். இதை இறுதி தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அருளிய திருக்குர்ஆன் மூலமாக அல்லாஹ் கூறுகின்றான்.

(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடத்திலும், நிச்சயமாக என்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. எனவே, என்னையே நீங்கள் அடிபணிய வேண்டும்‘ என்று நாம் வஹியின் மூலம் தாம் அறிவித்து இருந்தோம்.“ (அல்குர்ஆன் 21:25)

மேலும், நாம் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு தூதரை அனுப்பினோம், மேலும், அல்லாஹ் வுக்கு அடிபணியுங்கள். (தாஃகூத்து) ஷைத்தான்களுக்கு அடி பணிவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்!‘ என்று (அவரின் வாயிலாக) அனைவரையும் எச்சரித்தோம். (16:36)

இவ்வாறு இறைவன் அனுப்பிய தூதர்கள் இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் உண்டு. அதில் முஹம்மத் நபியுடன் சேர்ந்து 26 தூதர்களின் பெயரை குர்ஆன் குறிப்பிடுகிறது பைபிளும் அவர்களைப் பற்றிக் கூறுகிறது.

எண் குர்ஆனில் ஆதாரம் பைபிளில் ஆதாரம்

1. ஆதம் (அலை) 3 : 33 ஆதாம் Adam
2. நூஹ் (அலை) 6 : 84 நோவா Noah
3. இத்ரீஸ் (அலை) 19 : 56 ஈனோக் Enoch
4. ஹூ த் (அலை) 7 : 65 - -
5. ஸாலிஹ் (அலை) 7 : 73 - -
6. சுஹைப் (அலை) 7 : 85 - -
7. துல்கிப்லு (அலை) 21 : 85 - -

8. லூத் (அலை) 6 : 86 லோத் Lot

9. இப்ராஹீம் (அலை) 6 : 83 ஆபிரகாம் Abraham

10. இஸ்மாயீல் (அலை) 6 : 86 இஸ்மவேல் Ishmel

11. இஸ்ஹாக் (அலை) 6 : 84 ஈசாக்கு Isaac

12. யாகூப் (அலை) 6 : 84 யாகோபு Jacob

13. யூஸுப் (அலை) 6 : 84 யோசேப்பு Joseph

14. ஐயூப் (அலை) 6 : 84 யோபு Job

15. மூசா (அலை) 6 : 84 மோசே Moses

16. ஹாரூன் (அலை) 6 : 84 ஆரோன் Aaron

17. தாவூத் (அலை) 6 : 84 தாவீத் David

18. சுலைமான் (அலை) 6 : 84 சாலமோன் Solomon

19. இல்யாஸ் (அலை) 6 : 85 எலியா Elias/Elijah

20. அல்யஸஹ் (அலை) 6 : 86 எலீஷா Elisha

21. யூனுஸ் (அலை) 6 : 86 யோனா Jonah

22. உஸைர் (அலை) 9 : 30 இஸ்ரா Ezra

23. ஜக்கரிய்யா (அலை) 6 : 85 செகர்யா Zeehariah

24. யஹ்யா (அலை) 6 : 85 யோவான் John

25. ஈஸா (அலை) 6 : 85 இயேசு Jesus

26. முஹம்மது (ஸல்) 33:40 அஹ்மது, சத்தியஆவி, பெரக் லீட் Paraclyte

## 2. மர்யம் (அலை)

ஈஸா (அலை - இயேசு) அவர்களின் தாயை மர்யம் என்னும் பெயர் கொண்டு, குர்ஆன் அழைக்கிறது. மனித சமுதாயம் முழுவதற்கும் எக்காலத்திற்கும் ஏற்புடைய புனித கிரந்தமான திருக்குர்ஆன் மர்யம் (அலை) அவர்களையும் ஆஸியா (அலை) அவர்களையும் பெண் இனத்திற்கே முன்மாதிரியாக்கி வைத்துள்ளது. திருக்குர்ஆனிலுள்ள 114 அத்தியாயங்களில், ஒரு தலைப்பிற்கு மர்ய எனும் பெயரையும் சூட்டியுள்ளது. அத்துடன் 34 முறை மர்யம் என்னும் பெயர் குர்ஆனில் இடம் பெற்றுள்ளது. ஈஸா (அலை) அவர்களின் தாயான மர்யம் (அலை) அவர்களின் பிறப்பு குறித்து குர்ஆன் மிக விரிவாகவே பேசுகிறது.

ஆதாமையும், நூஹையும், இப்ராஹீமின் சந்ததியரையும், இம்ரானின் சந்ததியரையும் நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட மேலாகத் தேர்ந்தெடுத்தான். (அவர்களில்) ஒருவர் மற்றவரின் சந்ததியாவார். மேலும், அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றான். இம்ரானின் மனைவி. ம்என் இறைவனே! என் கர்ப்பத்தில் உள்ளதை உனக்கு முற்றிலும் அர்ப்பணிக்க நான் நிச்சயமாக நேர்ந்து கொள்கிறேன். எனவே (இதை) என்னிடமிருந்து நீ ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீ யாவற்றையும் செவியுறு வோனாகவும், நன்கறிபவனாகவும்

இருக்கின்றாய் என்று கூறியதையும் - (பின்-தான் எதிர்பார்த்ததற்கு மாறாக) அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றதும்: ம்என் இறைவனே! நான் ஒரு பெண்ணையே பெற்றிருக்கின் றேன்“ எனக் கூறியதையும் நினைவு கூறுங்கள்: அவள் பெற்றெடுத்ததை அல்லாஹ் நன்கறிவான்: ஆண், பெண் போலல்ல: (மேலும் அந்தத் தாய் சொன்னாள்:) ம்அவளுக்கு மர்யம் என்று பெயரிட்டுள்ளேன்: இன்னும் அவளையும் அவள் சந்ததியையும் விரட்டப்பட்ட சைத்தானின் தீங்குகளிலிருந்து காப்பாற்றத் திடமாக உன்னிடம் காவல் தேடுகின்றேன். அவளுடைய இறைவன் அவள் பிரார்த்தனையை அழகிய முறையில் ஏற்றுக்கொண்டான். அக்குழந்தையை அழகாக வளர்த்திடச் செய்தான்: அதனை வளர்க்கும் பொறுப்பை ஜகரிய்யா ஏற்றுக்கொள்ளும் படி செய்தான். ஜகரிய்யா அவள் இருந்த மிஹ்ராபுக்குள் (தொழும் அறைக்குப்) போகும் போதெல்லாம்: அவளிடம் உணவு இருப்பதைக் கண்டார், ம்மர்யமே! இவ்வுணவானது உனக்கு எங்கிருந்து வந்தது?“ என்று அவர் கேட்டார்: ம்இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது. நிச்சயமாக அல்லாஹ் தான் நாடியவர்களுக்குக் கணக்கின்றி உணவளிக்கின்றான்“ என்று அவள் (பதில்) கூறினாள்“ ( 3:33-37)

(நபியே!) இவை(யெல்லாம்) மறைவானவற்றில் உள்ள விஷயங்களாகும். இவற்றை நாம் உமக்கு வஹீ‘ மூலம் அறிவிக்கின்றோம். மேலும் மர்யம் யார் பொறுப்பில் இருக்க வேண்டும் என்பதைப் பற்றி (குறி பார்த்தறிய) தங்கள் எழுதுகோல்களை அவர்கள் எறிந்தபோது, நீர் அவர்களுடன் இருக்கவில்லை. (இதைப்பற்றி) அவர்கள் விவாதித்த போதும் நீர் அவர்களுடன் இருக்கவில்லை. (அல்குர்ஆன் 3:44)

(நபியே! மர்யமிடத்தில்) மலக்கு (வானவர்)கள்: மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் உம்மைத் தேர்ந்தெடுத்திருக்கின்றான். உம்மைத் தூய்மை யாகவும் ஆக்கியிருக்கின்றான். இன்னும் உலகத்திலுள்ள பெண்கள் யாவரையும் விட (மேன்மையாக) உம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறான்“ (என்றும்)

மர்யமே! நீ உன் இறைவனுக்கு ஸு ஜு து செய்தும், ருகூஃ செய்வோருடன் ருகூஃ செய்தும் வணக்கம் செய்வீராக‘ (என்றும்) கூறினர்.“ (அல்குர்ஆன்3:42,43)

### 3. இயேசுவின் பிறப்பு - பைபிளில்...

மர்யமின் குமாரனாகிய இயேசுவை கர்த்தராக்கி வைத்தற்கு கூறிய காரணங்களில் ஒன்று அவருடைய வியக்கத்தக்க பிறப்பு ஆகும். இயேசு தந்தையில்லாமல் பிறந்தார் என்று முஸ்லிம்களும் கிறித்தவர்களாலும் நம்பப்படுகிறது ஆனால் அவர், தந்தையில்லாமல் பிறந்தார் என்பதை பைபிள் மூலமாக விளக்குவது கடினமாகும். காரணம்!“

1. தந்தையான யோஸேப்பின் மகனாயிருந்தார் கிறித்து என்றே பைபிள் சுவிசேஷங்கள் கூறுகிறது. மத்தேயு உடைய சுவிசேஷத்தின் துவக்கத்திலே இயேசுவின் தலைமுறை பற்றி கூறும்பொழுது, ம்ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறித்துவினுடைய வம்ச வரலாறு:

ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்: ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான்: யாக்கோபு யூதாவையும் அவன் சகோதரரையும் பெற்றான்.

யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப் பெற்றான் அவளிடத்தில் கிறிஸ்து எனப்படுகிற இயேசு பிறந்தார். (மத்தேயு 1: 1, 2, 16) என்று கூறுகிறது.

2. லூக்காவுடைய சுவிசேஷத்தில் இயேசுவுடைய தலைமுறைப்பற்றிய விவரம் இவ்வாறு உள்ளது.

அப்பொழுது இயேசு ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரானார் அவர் யோசேப்பின் குமாரனென்று எண்ணப்பட்டார். அந்த யோசேப்பு ஏலியின் குமாரன் ஏலிமாத்தாத்தின் குமாரன்...

ஏனோஸ் சேத்தின் குமாரன்: சேத் ஆதமின் குமாரன்: ஆதாம் தேவனால் உண்டானவன்." (லூக்கா 3:23.38)

தந்தையில்லாமல் பிறந்தார் என்று கூறுவதற்கு ஆதாரமாக கூறப்படும் இவ்வசனம் இதுவாகும். ம்இயேசு கிறிஸ்துவின் ஜனனத்தின் விவரமாவது: அவருடைய தாயாகியமரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதி யானாள் என்று காணப்பட்டது. (மத்தேயு 1:18)

யோவான் சுவிசேஷத்திலும், மாற்கின் சுவிசேஷத்திலும், இயேசுவின் பிறப்பைக் குறித்து எந்தவொரு விவரமும் இல்லை. மத்தேயுடைய சுவிசேஷமும், லூக்காவின் சுவிசேஷமும் கூறும் விவரங்கள் சந்தேகத்தை உண்டு பண்ணக் கூடியதாக இருக்கிறது. மத்தேயு மற்றோர் இடத்தில் கூறுகிறார்.

அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான். அவன் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு, தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே. அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது." (மத்தேயு 1:19,20)

இவ்வசனங்களில் கவனிக்கத்தக்க விசயம் இதுவாகும். யோசேப்புக்கும் மரியத்திற்கும் திருமணம் நிச்சயிக்க மட்டுமே முடிந்தது." (மாத்தேயு 1:18) என்றால், உன் மனைவி என்று கூறமுடியாது. காரணம் திருமணம் ஆனால் மட்டுமே மனைவி என்னும் பதவியைப் பெறமுடியும். நிச்சயிக்கப்பட்ட திருமணம் பின்னால் நடக்கவிருப்பதால், மனைவியாகப் போகிற (மனைவியாகிய என்றல்ல) மரியாளை சேர்த்துக்கொள் என்பதாக வாக்கியம் அமைந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இல்லை.

மத்தேயு தொடர்ந்து கூறுகிறார், ம்யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக் கொண்டு, அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பெயரிட்டான்." (மத்தேயு 1 :24,25)

இனி இதுகுறித்து லூக்கா சொல்கிறார்:

அப்பொழுது யோசேப்பும், தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்த படியினாலே, தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப் படும்படி, கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத் தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான்." (லூக்கா 2 :4,5)

மரியாளுக்கும் யோசேப்பிற்கும் இடையே திருமண நிச்சயம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது என்றால், கர்ப்பவதியான மனைவிம் என்று எப்படிக் கூறமுடியும்? லூக்கா 2:48-ல் மரியமே தன் மகனான இயேசுவிடம் இப்படி கூறியதாக உள்ளது மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே" என்றாள்

இங்கே மரியாள் இயேசுவோடு, நானும் உன் தகப்பனும் என்று கூறுவதிலிருந்து யோசேப்பு இயேசுவின் பிதாவாக இருந்தார் என்றே உறுதிசெய்கிறது. மேலும், பலரும் கிறித்துவை பிதாவான யோசேப்பின் மகன் என்றே அழைத்ததாக சுவிசேஷங்களில் காணமுடிகிறது.

மத்தேயு 13:54,55 - ல் கூறுகிறார்: ம்தாம் வளர்ந்த ஊரிலே வந்து, அவர்களுடைய ஜெப ஆலயத்திலே அவர்களுக்கு உபதேசம் பண்ணினார். அவர்கள் ஆச்சரியப்பட்டு: இவனுக்கு இந்த ஞானமும் பலத்த

செய்கைகளும் எப்படி வந்தது? இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா?

யோவான் 1:45-ல் ம்நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்: அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்“ என உள்ளது.

கிறிஸ்த்துவின் பிறப்பு குறித்து தெளிவாக அறிந்து கொள்ள விரும்பும் ஒருவருக்கு இயேசு பிதா இல்லாமல் பிறந்தார் என்பதை சுவிசேஷங்கள் வழியாக தெளிவாக அறிய சாத்தியமில்லை. மரியாளுக்கு ஒரு கணவர் இருந்தார் என்னால் மரியாளை கன்னி என்று எப்படிக் கூறமுடியும்? இயேசு விபச்சாரத்தால் பிறந்தார் என்னும் யூதர்களின் குற்றச்சாட்டுகளுக்கு தெளிவான பதிலை கூற சுவிசேஷங்களால் முடியவில்லை. திருக்குர்ஆன் மட்டுமே அதை சாதித்தது.

### 4. இயேசுவின் ஜனனம் - திருக்குர்ஆனில்

ஆண் பெண் கூடலினால் ஆணின் விந்தணுவும் பெண்ணின் சினை முட்டையும் சேர்ந்து, கரு உண்டாகிறது. இதுவே பிறப்பு பற்றிய இயல்பான விதி. இதிலிருந்து மாறுபட்ட மூன்று பிறப்பைக் குறித்தும் திருக்குர்ஆன் கூறுகிறது.

1. ஆதமுடைய தோற்றம்
2. ஹவ்வாவுடைய தோற்றம்
3. ஈஸாவுடைய தோற்றம்

1. ஆதம்(அலை) அவர்கள் தாயும் தந்தையும் இல்லாமல் ஆதி மனிதராக படைக்கப்பட்டார்கள். இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

(நபியே!) உம்முடைய இறைவன் மலக்குகளிடம்: ஓசை தரும் கருப்பான களிமண்ணிலிருந்து, மனிதனை நிச்சயமாக நான் படைக்கப்போகிறேன் என்றும், அவரை நான் செவ்வையாக உருவாக்கி, அவரில் என் ஆவியிலிருந்து ஊதியதும், அவருக்கு சிரம் பணியுங்கள்‘ என்றும் கூறியதை (நினைவு கூர்வீராக!)“ (அல்குர்ஆன் 15:27,28)

(நபியே! நினைவு கூர்வீராக!) நிச்சயமாக நான் களிமண்ணிலிருந்து மனிதனைப் படைக்க இருக்கின்றேன்‘ என்று உம்முடைய இறைவன் கூறிய வேளையில், நான் அவரைச் செவ்வைப்படுத்தி, என் ஆவியிலிருந்து அவருக்குள் ஊதியபொழுது, அவருக்கு நீங்கள் விழுந்து ஸு ஜு து செய்யுங்கள்‘ (என்றுகூறியதும்)“ (அல்குர்ஆன் 38:71,72)

2. ஆதம்(அலை) அவர்களுக்கு மனைவியாக ஹவ்வா(அலை) அவர்களைப் படைத்ததும் அசாதாரணமானதாகும். தாயும் தந்தையும் இல்லாமல், ஆதமில் இருந்தே படைக்கப்பட்டார்கள். இதனை குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

அவனே, உங்களை ஒரே மனிதரிலிருந்து படைத்தான், அவருடன் கூடி (இணைந்து) வாழ்வதற்காக அவருடைய துணைவியை (அவரில் இருந்தே) படைத்தான்“ (அல்குர்ஆன் 7:189)

அவன் உங்களை ஒரே மனிதரிலிருந்து படைத்தான்: பிறகு அவரிடம் இருந்து அவருடைய மனைவியை ஆக்கினான்“ (அல்குர்ஆன் 39:6)

3. ஈஸா(அலை) இயேசு அவர்கள் தந்தையில்லாமல் படைக்கப்பட்டார்கள் அதனால் அவர் ஆதமைப் போன்றவராகின்றார் என்று குர்ஆன் கூறுகின்றது.

அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக ஈஸாவின் உதாரணம் ஆதமின் உதாரணம் போன்றதே. அவன் அவரை மண்ணிலிருந்து படைத்துப்பின் குன்‘ (ஆகுக) என்றான். அவர் (மனிதராக) ஆகிவிட்டார்.“ (அல்குர்ஆன் 3:59)

மேலும் ஈஸா(அலை) அவர்களின் பிறப்பு எத்தகையதாக இருந்தது என்பதையும் அன்னை மர்யம்(அலை) அவர்களின் பரிசுத்த தன்மையினையும், யூதர்கள் மர்யம் மீது சாட்டிய குற்றச்சாட்டுகளுக்கு பதிலையும் குர்ஆன் விரிவாக கூறுகிறது.

(நபியே!) இவ்வேதத்தில் மர்யமைப் பற்றியும் நினைவு கூர்வீராக! அவர் தம் குடும்பத்தினரை விட்டும் நீங்கி, கிழக்குப் பக்கமுள்ள இடத்தில் இருக்கும்போது, அவர் (தம்மை) அவர்களிடமிருந்து (மறைத்துக் கொள்வதற்காக) ஒரு திரையை அமைத்துக் கொண்டார். அப்போது நாம் அவரிடத்தில் நம் ரூஹை (ஜிப்ரயீலை) அனுப்பி வைத்தோம்: (மர்யமிடம்) சரியான மனித உருவில் தோன்றினார். (அப்படி அவரைக் கண்டதும்) நிச்சயமாக நான் உம்மை விட்டும் ரஹ்மானிடம் காவல் தேடுகிறேன், நீர் பயபக்தியுடையவராக இருந்தால் (என்னை நெருங்காதீர்)‘ என்றாள். நிச்சயமாக நான் உம் இறைவனின் தூதன் ஆவேன். பரிசுத்தமான புதல்வரை உமக்கு அளிக்க (வந்துள்ளேன்) என்று கூறினார். அதற்கு அவர் (மர்யம்) ம்எந்த ஆடவனும் என்னைத் தீண்டாமலும், நான் வழிதவறாமலிருக்கும் நிலையிலும், எனக்கு எவ்வாறு புதல்வன் உண்டாக முடியும்?‘ எனக் கேட்டார். ம்அவ்வாறேயாகும், இது எனக்கு மிகவும் சுலபமானதே. மனிதர்களுக்கு ஓர் அத்தாட்சியாகவும், நம்மிடமிருந்து ஒரு ரஹ்மத்தாகவும் நாம் அவரை ஆக்குவோம். இது விதிக்கப்பட்ட விஷயமாகும்‘ என்று உம் இறைவன் கூறுகிறான்“ எனக் கூறினார், அப்பால், மர்யம் ஈஸாவை கருக்கொண்டார். பின்னர் கர்ப்பத்துடன் தொலைவிலுள்ள ஓரிடத்தை சென்றடைந்தார். பின்பு அவருக்கு ஏற்பட்ட பிரசவ வேதனை, அவரை ஒரு பேரீத்த மரத்தின் பக்கம் கொண்டு வந்தது. அதற்கு முன்பே நான் இறந்து, முற்றிலும் மறுக்கப்பட்டவளாகி இருக்கக் கூடாதா?‘ என்று கூறி அரற்றினார். (அப்போது ஒருவானவர்) அவருக்குக் கீழிலிருந்து, (மர்யமே!) கவலைப்படாதீர்கள்! உம்முடைய இறைவன் நிச்சயமாக உமக்கு கீழாலேயே ஒரு சின்ன ஆற்றை உண்டாக்கியிருக்கின்றான்‘ என்று அழைத்து கூறினார். இன்னும் இந்த பேரீச்சமரத்தின் கிளையைப்பிடித்து உம் அருகில் இழுத்துக் குலுக்குவாயாக! (கொய்வதற்குப்) பக்குவமான பழங்களை அது உம் மீது உதிர்க்கும். ஆகவே,(அவற்றை) உண்டு, (ஆற்று நீரைப்) பருகி கண் குளிர்ந்து இருப்பீராக! பின்னர் எந்த மனிதரையேனும் நீர் பார்க்க நேரிட்டால், மெய்யாக அர்ரஹ்மானுக்காக நான் நோன்பிருப்பதாக நேர்ந்திருக் கின்றேன், ஆதலின் இன்றைய தினம் எந்த மனிதருடனும் பேசமாட்டேன் என்று கூறும்!“ (அல்குர்ஆன் 19:16-26)

மலக்குகள் கூறினார்கள்: மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னிடமிருந்து வரும் ஒரு சொல்லைக் கொண்டு உமக்கு (ஒரு மகவு வரவிருப்பது பற்றி) நன்மாராய்ங் கூறுகிறான். அதன் பெயர் மஸீஹ், மர்யமின் மகன் ஈஸா என்பதாகும். அவர் இவ்வுலகிலும் மறு உலகிலும் கண்ணியமிக்கவராகவும் (இறைவனுக்கு) நெருங்கி இருப்பவர்களில் ஒருவராகவும் இருப்பார். மேலும் அவர் (குழந்தையாகத்) தொட்டிலில் இருக்கும்போதும். (பால்ய வயது தாண்டி) முதிர்ச்சியடைந்த பருவத்திலும் அவர் மக்களுடன் பேசுவார். இன்னும் (நல்லொழுக்கமுடைய) சான்றோர்களில் ஒருவராகவும் இவர் இருப்பார்“ (அச்சமயம் மர்யம்) கூறினார்: ம்என் இறைவனே! என்னை ஒரு மனிதனும் தொடாதிருக்கும் போது, எனக்கு எவ்வாறு ஒரு மகன் உண்டாக முடியும்?“ (அதற்கு) அவன் கூறினான்: அப்படித்தான் அல்லாஹ், தான் நாடியதைப் படைக்கிறான், அவன் ஒரு காரியத்தைத் தீர்மானித்தால் அவன் அதனிடம் ஆகுக‘ எனக் கூறுகிறான். உடனே அது ஆகிவிடுகிறது. இன்னும் அவருக்கு அவன் வேதத்தையும் ஞானத்தையும் தவ்ராத்தையும் இன்ஜீலையும் கற்றுக்கொடுப்பான். (அல்குர்ஆன் 3:45-48)

மேலும், மர்யமுடைய மகனையும் அவருடைய தாயாரையும் ஓர் அத்தாட்சியாக்கினோம், அன்றியும் அவருக்கும் வசதியான நீரூற்றுக்கள் நிரம்பியதும், தங்குவதற்கு வசதியுள்ளதுமான மேட்டுப் பாங்கான நல்லிடத்தைக் கொடுத்தோம். (அல்குர்ஆன்23:50)

பின்னர் (மர்யம்) அக்குழந்தையைச் சுமந்து கொண்டு, தம் சமூகத்தாரிடம் வந்தார்: அவர்கள் கூறினார்கள்: ம்மர்யமே! நிச்சயமாக நீர் ஒரு விபரீதமான பொருளைக் கொண்டு வந்திருக்கிறீர்! ஹாரூனின் சகோதரியே! உம் தந்தை கெட்ட மனிதராக இருக்கவில்லை, உம் தாயாரும் நடத்தை பிசகியவராக இருக்கவில்லை“ (என்று பழித்துக் கூறினார்கள்) (ஆனால், தம் குழந்தையிடமே கேட்கும்படி) அதன் பக்கம் சுட்டிக் காட்டினார்: ம்நாங்கள் தொட்டிலில் இருக்கும் குழந்தையுடன் எப்படிப் பேசுவோம்?“ என்று கூறினார்கள். நிச்சயமாக நான் அல்லாஹ்வுடைய அடியானாக இருக்கின்றேன்: அவன் எனக்கு வேதத்தைக் கொடுத்திருக்கின்றான்: இன்னும் நான் இருந்தாலும் அவன் என்னை நற்பாக்கியமுடையவனாக ஆக்கியிருக்கின்றான்: மேலும், நான் உயிருடன் இருக்கும் காலமெல்லாம் தொழுகையையும் ஜகாத்தையும் (நிறைவேற்ற) எனக்கு வஸிய்யத் செய்து (கட்டளையிட்டு இருக்கின்றான். என் தாயாருக்கு நன்றி செய்பவனாக (என்னை ஏவியிருக்கின்றான்) நற்பேறு கெட்ட பெருமைக் காரனாக என்னை அவன் ஆக்கவில்லை. இன்னும் நான் பிறந்த நாளிலும், நான் இறக்கும் நாளிலும் (மறுமையில்) நான் உயிர்பெற்று எழும் நாளிலும் என் மீது சாந்தி நிலைத்திருக்கும்‘ என்று (அக்குழந்தை) கூறியது.“ (அல்குர்ஆன் 19:27-33)

மர்யமின் மகன் ஈஸாவுக்கு நாம் தெளிவான அத்தாட்சிகளைக் கொடுத்தோம்: இன்னும் ரூஹு ல் குதூஸ். (எனும் பரிசுத்த ஆத்மாவைக்) கொண்டு அவருக்கு உதவி செய்தோம்.“ (அல்குர்ஆன் 2:253)

இயேசு இறைவனின் அடிமையும் தூதரும் ஆவார். இவ்விவரத்தை அவர் மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தியுமிருக்கின்றார்.

(ஈஸா) மஸீஹு ம், (அல்லாஹ்வுக்கு) நெருக்கமான மலக்குகளும் அல்லாஹ்வுக்கு அடிமையாயிருப்பதைக் குறைவாகக் கொள்ள மாட்டார்கள். எவர் அவனுக்கு (அடிமையாய்) வழிபடுதலைக் குறைவாக எண்ணி, கர்வமும் கொள்கிறார்களோ, அவர்கள் யாவரையும் மறுமையில் தன்னிடம் ஒன்று சேர்ப்பான்“ (திருக்குர்ஆன் 4:172)

மர்யமுடைய குமாரர் மஸீஹ் இறைதூதரேயன்றி, வேறில்லை, இவருக்கு முன்னரும் தூதர்கள் பலர் வந்து சென்று விட்டனர். இவருடைய தாயார் மிக்க உண்மையானவர். இவ்விருவரும் (மற்ற மனிதர்களைப் போன்று) உணவு உண்பவர்களாகவே இருந்தனர்: அவர்களுக்கு நம்முடைய அத்தாட்சிகளைக் கொண்டு எவ்வாறு தெளிவாக்கினோம் என்பதை (நபியே!) நீங்கள் கவனிப்பீராக! அவர்கள் எவ்வாறு திசை திருப்பப்படுகிறார்கள் என்பதையும் கவனிப்பீராக!“ (அல்குர்ஆன் 5:75)

வேதத்தையுடையோரே! நீங்கள் உங்கள் மார்க்கத்தில் அளவு கடந்து செல்லாதீர்கள். அல்லாஹ்வைப் பற்றி உன்மையைத் தவிர (வேறெதையும் கூறாதீர்கள்!. நிச்சயமாக மர்யமுடைய மகனாகிய ஈஸா அல் மஸீஹ் அல்லாஹ்வின் தூதர் தான். இன்னும் (குன் ஆகுக‘ என்ற) அல்லாஹ்வின் வாக்காக (அதனால் உண்டானவராகவும்) இருக்கின்றார். அதை அவன் மர்யமின் மீது போட்டான்(எனவே) அவரும் அவனிட மிருந்து (வந்த) ஒரு ஆன்மாதான்: ஆகவே, அல்லாஹ்வின் மீதும் அவன் தூதர்கள் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 4 :171)

மேலும், மர்யமின் குமாரர் ஈஸா, ம்இஸ்ராயீல் மக்களே! எனக்கு முன்னுள்ள தவ்ராத்தை மெய்ப்பிப்பவனாகவும்: எனக்கு பின்னர் வரவிருக்கும் அஹ்மத்‘ என்னும் பெயருடைய தூதரைப் பற்றி

நன்மாராயங் கூறுபவனாக இருக்கும் நிலையில் அல்லாஹ்வின் தூதனாக உங்களிடம் வந்துள்ளேன்“ என்று கூறிய வேளையை (நபியே! நீர் நினைவு கூர்வீராக!)

(நபியே!) நூஹு க்கும் அவருக்குப் பின்வந்த (இதர) நபிமார்களுக்கும் நாம் வஹீ அறிவித்தது போலவே, உமக்கும் நிச்சயமாக வஹீ அறிவித்தோம். மேலும், இப்ராஹீமுக்கும், இஸ்மாயீலுக்கும், இஸ்ஹாக்குக்கும், யஃகூபுக்கும் (அவர்களின்) சந்ததியினருக்கும், ஈஸாவுக்கும், அய்யூபுக்கும், யூனுஸு க்கும், ஹாரூனுக்கும், ஸு லைமானுக்கும் நாம் வஹீ அறிவித்தோம் இன்னும் தாவூதுக்கு ஜபூர்‘ (வேதம்) கொடுத்தோம். (அல்குர்ஆன் 4:163)

இன்னும் (முன்னிருந்த) நபிமார்களின் அடிச்சுவடுகளிலேயே மர்யமின் குமாரராகிய ஈஸாவை, அவருக்கு முன் இருந்த தவ்ராத்தை உண்மைப்படுத்துபவராக நாம் தொடரச் செய்தோம். அவருக்கு நாம் இன்ஜீலையும் கொடுத்தோம். அதில் நேர்வழியும் ஒளியும் இருந்தன. அது தனக்கு முன்னிருக்கும் தவ்ராத்தை உண்மைப்படுத்துவதாக இருந்தது. அது பயபக்தியுடையவர்களுக்கு நேர்வழி காட்டியாகவும் நல்லுபதேசமாகவும் உள்ளது. (அல்குர்ஆன் 5:46)

பின்னர் அவர்களின் (அடிச் ) சுவடுகளின் மீது (மற்றைய) நம் தூதர்களைத் தொடரச் செய்தோம். மர்யமின் குமாரர் ஈஸாவை (அவர்களை)த் தொடரச் செய்து, அவருக்கு இன்ஜீலையும் கொடுத்தோம்.“ (திருக்குர்ஆன் 57:27)

### 5. திருத்தூதர் இயேசு பைபிளில்...

கிறித்து ஒரு தூதராக மட்டுமே இருந்தார் என்று குர்ஆன் கூறுவதை பைபிளும் அங்கீகரிக்கிறது.

இயேசு தம் வரவு குறித்து கூறியதை மத்தேயு உடைய சுவிசேஷம் இவ்வாறு கூறுகிறது:

நியாயப் பிரமாணத்தையானாலும், தீர்க்க தரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள். அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.“ (மத்தேயு 5:17)

ஒரு தூதரை விட மேலான தகுதி தனக்கு இருக்கிறது என்று இயேசு உரிமை கோரியதில்லை. தான் ஒரு தூதர் என்னும் நிலையில் அவர் மேலும் கூறுகின்றார்:

அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்.“ (யோவான் 6:29)

என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. அவரின் சித்தத்தின் படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான். சுயமாய் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை.‘ (யோவான் 7:16-18)

என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர். நான் அவரிடத்தில் கேட்டவைகளையே உலகத்துக்குச் சொல்லுகிறேன்‘ என்றார்.“ (யோவான் 8 :26)

நான் சுயமாய் பேசவில்லை, நான் பேச வேண்டியது இன்னதென்றும், உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவரின் கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன். ஆகையால், நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொல்லியப்படியே பேசுகிறேன் என்றார் . (யோவான் 12:4)

சீஷரை நோக்கி: உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் எனக்கு செவிகொடுக்கிறான். உங்களை அசட்டை பண்ணுகிறவன் என்னை அசட்டை பண்ணுகிறான். என்னை அசட்டை பண்ணுகிறவன் என்னை அனுப்பின வரை அசட்டை பண்ணுகிறான் என்றார்." (லூக்கா 10:16)

சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க நான் பிறந்தேன். இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்: சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்." (யோவான் 18:37)

இயேசுவின் ஊரான நாசரேத்திலிருந்து அவரை வெளியேற்றப்பட்டபோது அவர் கூறினார்: ம்தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும், தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீன மடையான் என்றார்." (மாற்கு 6:4)

இதையே மத்தேயுவும் லூக்காவும் கூட கூறுகின்றார்கள் (பார்க்க மத்தேயு 13:57 லூக்கா 4:24)

மற்றோர் இடத்தில் இயேசு கூறுகின்றார். ம்என்னை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை அனுப்பின வரை ஏற்றுக்கொள்ளுகிறான். தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்." (மத்தேயு 10:40,41)

இன்றைக்கும், நாளைக்கும், மறுநாளைக்கும் நான் நடமாட வேண்டும், எருசலேமுக்குப் புறம்பே ஒரு தீர்க்கதரிசியும் மடிந்து போகிற தில்லை என்று நான் சொன்னதாக நீங்கள் போய் அந்த நரிக்குச் சொல்லுங்கள்." (லூக்கா 13:33)

தங்கள் சமூகத்திற்கு அனுப்பபட்ட தூதர்களை நிராகரிக்கக்கூடிய ஒரு கூட்டத்திற்கும் எக்காலக்கட்டத்திலும் இருந்தது போலவே இயேசுவின் காலகட்டத்திலும் இருந்தது. இயேசுவின் தூதுத்துவத்தை அவர்கள் நிராகரிக்கவும் எதிர்க்கவும் செய்தார்கள். அது குறித்து சில குறிப்புகளை பைபிளிலும் காணலாம்.

அப்போழுது பரிசேயர், நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா? அதிகாரிகளிலாவது பரிசேயரிலாவது யாதேனுமொருவர் அவனை விசுவாசித்ததுண்டா? வேதத்தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள் என்றார்கள். இராத்திரியிலே அவரிடத்திற்கு வந்தவனும் அவர்களிலொருவனுமாகிய நிக்கொதேமு என்பவன் அவர்களை நோக்கி: ஒரு மனுஷன் சொல்வதைக் கேட்டு அவன் செய்கைகளை அறிவதற்கு முன்னே, அவனை ஆக்கினைப் படுத்தலாமென்று நம்முடைய நியாயப் பிரமாணம் சொல்லுகிறதா? என்றான். அதற்கு அவர்கள், நீரும் கலிலேயனோ? கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை என்பதை ஆராய்ந்து பாரும் என்றார்கள்.

இயேசுவை தூதர் என்று நம்புவதை விட்டும் பாமரமக்களை திசைதிருப்புவதற்காக புரோகிதர்கள் எடுத்த முயற்சியை இவ்வசனங்கள் விவரிக்கிறது. அக்கால இறைவிசுவாசிகளைப் பொறுத்த வரை அவர்கள் இயேசுவை இறைவனின் தூதர் என்றே நம்பினார்கள் என்பதையும் பைபிள் விவரிக்கிறது:

பிரதான ஆச்சாரியரும், பரிசேயரும் அவருடைய உவமைகளைக் கேட்டு, தங்களைக் குறித்துச் சொல்லுகிறார் என்று அறிந்து, அவரைப் பிடிக்க வகை தேடினார்கள்.

ஆகிலும் ஜனங்கள் அவரைத் தீர்க்கதரிசி யென்று எண்ணின படியினால் அவர்களுக்குப் பயந்திருந்தார்கள்." (மத்தேயு 21:45-46)

அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபோது, இவர் தீர்க்க தரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப் பட்டவளென்றும் அறிந்திருப்பார்." (லூக்கா 7:39)

பின்பு இயேசுவும் அவருடைய சீஷர்களும் புறப்பட்டு பிலிப்புச் செசரியா பட்டணத்தைச் சேர்ந்த கிராமங்களுக்குப் போனார்கள், வழியிலே அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஜனங்கள் என்னை

யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்: அதற்கு அவர்கள் : சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர், நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். பேதுரு பிரதியுத்தரமாக, நீர் கிறித்து என்றான்.“ (மாற்கு 8: 27-29)

அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்பவன் பிரதியுத்தரமாக: இந்நாட்களில் எருசலேமிலே நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான். அவர், எவைகள் என்றார். அதற்கு அவர்கள் நாசரேயனாகிய இயேசுவைக் குறித்தவைகளே, அவர் தேவனுக்கு முன்பாகவும் ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார்.“ (லூக்கா 24:18,19)

அவர் எருசலேமுக்குள் பிரவேசிக்கையில், நகரத்தார் யாவரும் ஆச்சரியப்பட்டு, இவர் யார்? என்று விசாரித்தார்கள். அதற்கு ஜனங்கள் இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்க தரிசியாகிய இயேசு என்றார்கள்.“ (மத்தேயு 21:10,11)

அப்பொழுது அந்த ஸ்தீரீ அவரை நோக்கி, ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்.“ (யோவான் 4 :19)

மறுபடியும் அவர்கள் குருடனை நோக்கி: உன் கண்களைத் திறந்தாரே, அவர்களை குறித்து நீ என்ன சொல்லுகிறாய் என்றார்கள். அதற்கு அவன்: அவர் தீர்க்கதரிசி என்றான்.“ (யோவான் 9:17)

இயேசு போதனைகளையும், செயல்பாடுகளையும் கண்ட அக்கால இறைவிசுவாசிகள் அவரை ஒருதீர்க்க தரிசி அதாவது, தூதர் என்றே கருதினார்கள் என்பதையே மேற்கண்ட சம்பவங்களின் அடிப்படையில் பைபிள் கூறியுள்ளது.

### 6. இயேசுவின் தூதுத்துவம்

மனித சமூகத்திற்கு இறைவன் அனுப்பிய தூதர்கள் அனைவரும் எப்படி இறைவனை மட்டுமே வணங்க வேண்டும் என்று போதித் தார்களோ, அப்படியே இயேசுவும் போதித்தார் என்று திருக்குர்ஆன் நமக்கு தெளிவாகவே அறிவித்துத் தருகிறது.

இயேசு கூறுவதாக திருக்குர்ஆன் கூறுகிறது: ம்எனக்கு முன் இருக்கும் தவ்ராத்தை மெய்பிக்கவும், உங்களுக்கு விலக்கி வைக்கப்பட்டவற்றில் சிலவற்றை உங்களுக்கு அனுமதிக்கவும், உங்கள் இறைவனிடமிருந்து (இத்தகைய) அத்தாட்சியை உங்களிடம் நான் கொண்டு வந்திருக்கிறேன்: ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் என்னை பின்பற்றுங்கள்

நிச்சயமாக அல்லாஹ்வே என்னுடைய இறைவனும், உங்க ளுடைய இறைவனும் ஆவான். ஆகவே, அவனையே வணங்குங்கள் இதுவே நேரான வழியாகும்.“ (திருக்குர்ஆன் 3:50,51)

இன்னும், ஈஸா தெளிவான அத்தாட்சிகளுடன் வந்தபோது: ம்மெய்யாகவே நான் உங்களுக்கு ஞானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்: நீங்கள் கருத்து வேற்றுமையுடன் இருக்கும் சிலவற்றை உங்களுக்கு விளக்கிக் கூறுவேன். ஆகவே, நீங்கள் அல்லாஹ்விடம் பயபக்தியுடன் இருங்கள். எனக்கும் கீழ்படியுங்கள்“ என்று கூறினார். நிச்சயமாக, அல்லாஹ்தான் எனக்கும் இறைவன், உங்களுக்கும் இறைவன். ஆகவே, அவனையே வணங்குங்கள், இதுவே ஸிராத்துல் முஸ்தகீம் (நேரான வழி) ஆனால், அவர்களிடையே (ஏற்பட்ட பல) பிரிவினர் தமக்குள் மாறுபட்டனர். ஆதலின் அநியாயம் செய்தார்களே அவர்களுக்கு நோவினை தரும் நாளுடைய வேதனையில் கேடுதான் உண்டாகும். (திருக்குர்ஆன் 43: 63-65)

மஸீஹ் கூறினார்: ம்இஸ்ராயீலின் சந்ததியினரே! என்னுடைய இறைவனும் உங்களுடைய இறைவனுமாகிய அல்லாஹ்வை வணங்குங்கள்“ என்று. எனவே, எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பானே அவனுக்கு அல்லாஹ் சுவனபதியை நிச்சயமாக ஹராமாக்கி விட்டான். மேலும், அவன் ஒதுங்குமிடம் நரகமேயாகும், அக்கிரமக் காரர்களுக்கு உதவி புரிபவர் எவருமில்லை.“ (திருக்குர்ஆன் 5:72)

நூஹு க்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான். ஆகவே, (நபியே!) நாம் உமக்கு வஹீ‘ மூலம் அறிவிப்பதும், இப்ராஹீமுக்கும், மூசாவுக்கும், ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால், நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலைநிறுத்துங்கள். நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள்“ என்பதே. (திருக்குர்ஆன் 42:13)

எல்லா இறைதூதர்களிடமும் இறைவன் வாக்குறுதி வாங்கியிருப்பது போல, ஈஸா(அலை) அவர்களிடமும் வாக்குறுதி வாங்கியுள்ளான்.

நபியே! நம் கட்டளைகளை எடுத்துக் கூறுமாறு நபிமார்கள் அனைவர்களிடமும் (சிறப்பாக) உம்மிடமும், நூஹு ம், இப்ராஹீம், மூஸா , மர்யமின் குமாரர் ஈஸா ஆகியோரிடமும் வாக்குறுதி வாங்கிய போது, மிக்க உறுதியான வாக்குறுதியையே அவர்களிடம் நாம் வாங்கினோம். எனவே, உண்மையாளர்களாகிய (அத்தூதர்களிடம்) அவர்கள் (எடுத்துக் கூறிய தூதின்) உண்மையைப்பற்றி அல்லாஹ் கேட்பான். இறைமறுப்பாளர்களுக்கு அல்லாஹ் நோவினை தரும் வேதனையைச் சித்தம் செய்திருக்கின்றான்.“ (திருக்குர்ஆன் 33:7,8)

இறைவனின் செய்தியை மக்களிடம் எடுத்துச் சொல்லவும், சத்திய மார்க்கத்திற்கு சாட்சியாளர்களாகவும், தெய்வீக மார்க்கத்தை நிலைநிறுத்தக் கூடியவர்களாகவும் ஆகுவதற்காக இறைவன் எல்லா தூதர்களிடம் வாங்கிய வாக்குறுதியை போன்று, ஈஸா(அலை) அவர்களிடமும் வாங்கியுள்ளான். ஈஸா(அலை) அவர்களின் போதனையை ஏற்று பின்பற்றியவர்களை ஹவாரியூன் என்று குர்ஆன் குறிப்பிடுகிறது. இந்த ஹவாரிகள் இறைவனின் மார்க்கத்தை எடுத்துரைக்க ஈஸாவிற்கு உறுதியுடன் உதவியாயிருந்தார்கள் என்றும் திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது.

அவர்களிடம் இறைமறுப்புத் தன்மை‘ இருப்பதை (அதாவது அவர்களில் ஒரு சாரார் தம்மை நிராகரிப்பதை) ஈஸா உணர்ந்த போது, ம்அல்லாஹ்வின் பாதையில் எனக்கு உதவி செய்பவர்கள் யார்? என்று அவர் கேட்டார்: (அதற்கு அவர்களின் சிஷ்யர்களான) ஹவாரிய்யூன், ம்நாங்கள் அல்லாஹ் வுக்காக(உங்கள்) உதவியாளர்களாக இருக்கிறோம். நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். திடமாக நாங்கள் (அவனுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக இருக்கின்றோம், என்று நீங்கள் சாட்சி சொல்லுங்கள்“ எனக் கூறினார்கள்.

எங்கள் இறைவனே! நீ அருளிய (வேதத்)தை நாங்கள் நம்புகிறோம், (உன்) இத்தூதரை நாங்கள் பின்பற்றுகிறோம்: எனவே எங்களை (சத்தியத்திற்கு) சாட்சி சொல்வோருடன் சேர்த்து எழுதுவாயாக!“ (என்று சிஷ்யர்களான ஹவாரிய்யூன் பிராத்தித்தனர்)“ (திருக்குர்ஆன் 3:52,53)

இறைநம்பிக்கையாளர்களே! மர்யமின் குமாரர் ஈஸா(தம்) சீடர்களை நோக்கி, ம்அல்லாஹ்வுக்காக எனக்கு உதவி செய்வோர் யார்? எனக் கேட்க , சீடர்கள், ம்நாங்கள் அல்லாஹ்வின் உதவியாளர்களாக இருக்கின்றோம் என்று கூறியது போல் நீங்கள் அல்லாஹ்வின் உதவியாளர்களாக ஆகிவிடுங்கள். எனினும் இஸ்ராயீல் மக்களில், ஒரு கூட்டம் நம்பிக்கை கொண்டது. பிறிதொரு

கூட்டமோ மறுத்தது. ஆகவே, நம்பிக்கையாளர்களுக்கு, அவர்களின் பகைவர்களுக்கு எதிராக உதவி அளித்தோம். அதனால் அவர்கள் வெற்றியாளராக ஆகிவிட்டார்கள். (திருக்குர்ஆன் 62:14)

## III ஐயமும் - தெளிவும்

### 1. அல்லாஹ்வின் வாக்கு

அல்லாஹ் தன் திருமறைக் குர்ஆனில் கூறுகிறான்: வேதத்தையுடையோரே! நீங்கள் உங்கள் மார்க்கத்தில் அளவு கடந்து செல்லாதீர்கள். அல்லாஹ்வைப் பற்றி உண்மையைத் தவிர (வேறெதையும்) கூறாதீர்கள். நிச்சயமாக மர்யமுடைய மகனாகிய ஈஸாவாகிய அல்மஸீஹ் அல்லாஹ்வின் தூதர்தான். இன்னும் (ம்குன்‘ ஆகுக என்ற) அல்லாஹ்வின் வாக்காக (அதனால் உண்டானவராகவும்) இருக்கின்றார்: அதை அவன் மர்யமின் மீது போட்டான். (எனவே) அவரும் அவனிட மிருந்து (வந்த) ஒர் ஆன்மாதான்: ஆகவே, அல்லாஹ்வின் மீதும் அவன் தூதர்கள் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள்: இன்னும், (வணக்கத்திற்குரிய இறைவன்) மூன்று என்று கூறாதீர்கள்- (இப்படிக் கூறுவதை விட்டு) விலகிக் கொள்ளுங்கள். (இது) உங்களுக்கு நன்மையாகும். ஏனெனில், வணக்கத்திற்குரிய இறைவன் ஒருவன்தான். அவனுக்கு எவரும் சந்ததியாக இருப்பதிலிருந்து அவன் தூய்மையானவன். வானங்களிலும் பூமியிலும் இருப்பவையெல்லாம் அவனுக்கே சொந்தம். (காரியங்கள் அனைத்துக்கும்) பொறுப்பேற்றுக் கொள்வதற்கு அல்லாஹ்வே போதுமானவன்.“ (திருக்குர்ஆன் 4:171)

இவ்வசனத்தில் இயேசுவை இறைவாக்கு என்றும், ஆன்மா என்றும் சிறப்பித்துக் கூறப்படுவது, இயேசு இறைவனின் குமாரன் என்பதற்கும் போதுமான ஆதாரம் அல்லவா? என கேள்வி எழுப்பப்படுகிறது.

இப்பிரபஞ்சமும், அதிலுள்ள படைப்புக்களும் இயேசுவை படைத்தது போன்று இறைவனின் வாக்கு கொண்டே படைக்கப்பட்டது என்று குர்ஆன் வசனங்கள் தெளிவாக்குகின்றன. இயேசுவையும் மற்றுமுள்ள மனிதர்களையும் அனைத்து பொருட்களையும் இறைவன் படைத்தது, தன் வாக்கைக் கொண்டே ஆகும். அதனால், இவ்விஷயத்தில் இயேசுவுக்கு எந்தவொரு சிறப்பும் இல்லை.

இன்னும் கூறுகிறார்கள்: அல்லாஹ் ஒரு குமாரனைப் பெற்றிருக்கிறான்“ என்று. அப்படியல்ல - அவன் (இவர்கள் கூறுவதிலிருந்து) மிகத்தூய்மையானவன். வானங்கள், பூமியில் உள்ளவையாவும் அவனுக்கே உரியவை. இவையனைத்தும் அவனுக்கே அடிபணிந்து வழிபடுகின்றன. (அல்லாஹ்) வானங்களையும், பூமியையும் முன்மாதிரியின்றி (இல்லாமையிலிருந்து) தானே உண்டாக்கினான். அவன் ஒன்றை உண்டாக்க விதித்து: அதனிடம் (ம்குன்ம்) ஆகுக-என்று கூறினால், உடனே அது ஆகிவிடுகிறது. (திருக்குர்ஆன் 2:116,117)

இதே விதமான வார்த்தைப் பிரயோகத்தையே இறைவன் இயேசுவின் விஷயத்தில் உபயோகப்படுத்தியுள்ளான். ம்மர்யம் கூறினார்: ம்என் இறைவனே! என்னை ஒரு மனிதனும் தொடாதிருக்கும் போது, எனக்கு எவ்வாறு ஒரு மகன் உண்டாக முடியும்?“ (அதற்கு) அவன் கூறினான்: ம்அப்படித் தான். அல்லாஹ்தான் நாடியதைப் படைக்கிறான். அவன் ஒரு காரியத்தைத் தீர்மானித்தால், அவன் அதனிடம் ஆகுக‘ எனக் கூறுகிறான், உடனே அது ஆகிவிடுகிறது. (குர்ஆன் 3:47)

அல்லாஹ்வுக்கு எந்தவொரு புதல்வனையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை, அவன் தூயவன்: அவன் ஒரு காரியத்தைத் தீர்மானித்தால், ஆகுக!‘ என்றுதான் கூறுவான்: (உடனே) அது ஆகிவிடுகிறது.“ (திருக்குர்ஆன் 19:35)

அவனே உயிர்பிக்கிறான்: அவனே மரிக்கச்செய்கிறான். ஆகவே அவன் ஒரு காரியத்தை (செய்ய)த் தீர்மானித்தால், ஆகுக!‘ என்று அதற்குக் கூறுகிறான். உடன் அது ஆகிவிடுகின்றது. (திருக்குர்ஆன் 40:68)

இயேசுவைப் போலவே ஆதிமனிதரான ஆதத்திற்கும் மற்ற அனைவருக்கும் இறைவன் தன் ஆத்மாவிலிருந்து எடுத்து ஊதியதாக குர்ஆன் கூறுகிறது. ஆதலால், இவ்விஷயத்திலும் இயேசுவிற்கு எந்தவொரு சிறப்பும் கற்பிக்க முடியாது.

மனிதனின் ஆரம்ப படைப்புபற்றி குர்ஆன் கூறுகிறது: (நபியே!) உம் இறைவன் மலக்குகளிடம்: ம்ஓசை தரும் கருப்பான களி மண்ணிலிருந்து, மனிதனை நிச்சயமாக நான் படைக்கப் போகிறேன்“ என்றும், அவரை நான் செவ்வையாக உருவாக்கி, அவரில் என் ஆவியிலிருந்து ஊதியதும். அவருக்கு சிரம் பணியுங்கள் என்றும் கூறியதை (நினைவு கூர்வீராக)!“ (திருக்குர்ஆன் 15:28,29)

இயேசுவை இறைவனின் வாக்கு என்றும் ஆத்மா என்றும் கூறிய இறைவசனத்திலேயே (4:171) திரித்துவத்தை கண்டித்தும் கூறப்பட்டு உள்ளது.

## 2. இயேசுவின் அற்புதங்கள்

இயேசு பறவைகளுக்கும், இறந்த உடலுக்கும் உயிரூட்டியதாகவும்: குருடர்களுக்கு பார்வை வழங்கியதாகவும், குஷ்டரோகிகளை குணப்படுத்தியதாகவும் குர்ஆனும் கூறுகிறதே? இதெல்லாம் இறைத் தன்மைகொண்ட அம்சம்தானே? என்னும் கேள்வியும் எழுப்பப்படுகிறது.

இறைவனின் தூதர்களாக மனித சமுதாயத்திற்கு அனுப்பப்பட்டவர்களை அச்சமூகத்தார் நம்புவதற்காக சில அற்புதங்களும் அத்தாட்சிகளும் வழங்கப்பட்டது. அந்நிலையில் இயேசு அவர்களுக்கும் இறைவன் அற்புதங்களை வழங்கினான். அந்த அற்புதங்களும் இறைவனின் நாட்டப்படி கட்டளையின் படி செய்ததே அல்லாமல், சுயமாக செய்தது கிடையாது. இதனை குர்ஆன் தெளிவுபடுத்துவதோடு, பைபிளும் ஒப்புக் கொள்கின்றது.

இஸ்ராயீலின் சந்ததியினருக்குத் தூதராகவும் (அவரை ஆக்குவான்: இவ்வாறு அவர் ஆகியதும் இஸ்ரவேலர்களிடம் அவர்:) ம்நான் உங்கள் இறைவனிடமிருந்து அத்தாட்சியுடன் நிச்சயமாக வந்துள்ளேன்: நான் உங்களுக்காக களிமண்ணால் ஒரு பறவையின் உருவத்தை உண்டாக்கி: நான் அதில் ஊதுவேன், அது அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு (உயிருடைய) பறவையாகிவிடும், பிறவி குருடர்களையும், வெண்குஷ்டரோகிகளையும், குணப்படுத்துவேன். அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு இறந்தோரையும் உயிர்ப் பிப்பேன். நீங்கள் உண்பவற்றையும், நீங்கள் உங்கள் வீடுகளில் சேகரம் செய்து வைத்திருப்பதையும் பற்றி நான் உங்களுக்கு எடுத்துக் கூறுவேன். நீங்கள் இறைநம்பிக்கையாளர்களாக இருந்தால், நிச்சயமாக இவற்றில் உங்களுக்குத் திடமான அத்தாட்சி இருக்கிறது“ (என்று கூறினார்) என்று குர்ஆன் கூறுகிறது. (திருக்குர்ஆன் 3:49)

இறந்துபோன லாஸரை இயேசு உயிர்பித்தார் என்று பைபிள் கூறவில்லை. உயிர்கொடுத்து எழுப்ப கர்த்தரிடம் பிரார்த்தித்தார் என்றே பைபிள் கூறுகிறது. இன்னும் இயேசுவிற்கு மட்டுமல்ல மற்றுமுள்ள பல தீர்க்கதரிசிகளுக்கும் அற்புதங்கள் வழங்கப்பட்டதாக பைபிள் கூறுகிறது.

1. எலிஷா தீர்க்கதரிசி சசூனேமியாளின் இறந்த மகனை உயிர்கொடுத்து எழுப்பியுள்ளார். (II இராஜாக்கள் 4:28-37)

2. எலிஷா, 20 அப்பங்களையும் கொஞ்சம் தாள் கதிர்களையும் கொண்டு 100 போர்களுக்கு வயிறு நிறைய உண்ணக்கொடுத்து மீதமும் வைக்கும் படி செய்தார். (II இராஜாக்கள் 4: 42-44)

3. எலீஷா சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமானின் குஷ்டரோகத்தைக் குணப்படுத்தினார்.“ (II இராஜாக்கள் 51 -14)

4. எலீஷா, சீரிய மக்களின் கண்களுக்கு மயக்கம் ஏற்படச் செய்து, பின் அதை சுகப்படுத்தவும் செய்தார். (II இராஜாக்கள் 6:18 - 21)

5. எலியாவும் வியாதியில் கிடந்து இறந்தவனை உயிர்ப்பித்தார் (I இராஜாக்கள் 17: 17-22)

6. ம்எசேக்கியேல், எலும்புகளையும் நரம்புகளையும் சேர்த்து: மாமிசம் கொண்டு போர்த்தி கொலை செய்யப்பட்டவர்களை உயிர்கொடுத்து எழுப்பினார்.“ (எசேக்கியேல் 37: 6-10)

இன்னும் கள்ள கிறித்துவும் கள்ள தீர்க்கதரிசிகளும் கூட அற்புதங்கள் செய்வார்கள் என்றும் பைபிள் கூறுகிறது. ம்ஏனெனில், கள்ளக் கிறித்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.“ (மத்தேயு 24:24)

இதனால் அற்புதம் செய்தால், அவர் கடவுள் என்று கூறிட முடியாது.

### 3. அல்லாஹ் இயேசுவை தன்னளவில் உயர்த்துதல்

அல்லாஹ் அவரைத் தன்னளவில் உயர்த்திக் கொண்டான்.“ என்று (அல்குர்ஆன் 4:158) கூறுகிறதே. எல்லோரும் இறந்திருக்க இயேசு மட்டும் உயிருடன் இருக்கிறார் என்றால் அவர் தெய்வீக அம்சம் பொருந்தியர் என்றுதானே விளங்க முடிகிறது?

இறைத்தூதர்களில் பலரும் பலவகையில் சிறப்பு அம்சம் பொருந்தியவர்களாக இருந்திருக்கின்றனர். உதாரணத்திற்கு மோசே இறைவனோடு நேரில் பேசியிருக்கிறார். இயேசுவின் சிறப்பு அம்சம் அவர் தந்தையில்லாமல் பிறந்ததும், எதிரிகளின் கொடுமையிலிருந்து இரட்சிக்கப்பட்டு இறைவன் பக்கம் உயர்த்தப்பட்டதுமாகும்.

இறைவனிடத்தில் இயேசு உயிருடன் இருப்பது உண்மையாகும். என்றாலும், இயேசு மட்டுமல்ல. இஸ்லாத்திற்காக உயிர் நீத்த உயிர் தியாகிகளும் கூட இறைவனிடத்தில் உயிருடன் இருக்கின்றார்கள் என்றே குர்ஆன் கூறுகிறது. ம்அல்லாஹ்வின் பாதையில் போரிட்டுக் கொல்லப்பட்டவர்களை மரித்தவர்கள் என்று நிச்சயமாக எண்ணாதீர்கள். - தம் ரப்பினிடத்தில் அவர்கள் உயிருடனேயே இருக்கிறார்கள் - (அவனால்) அவர்கள் உணவளிக்கப்படுகிறார்கள். தன் அருட் கொடையிலிருந்து, அல்லாஹ் அவர்களுக்கு அளித்ததைக் கொண்டு, அவர்கள் ஆனந்தத்துடன் இருக்கிறார்கள்: மேலும், (போரில் ஈடுபட்டிருந்த இறைநம்பிக்கையுள்ள தம் சகோதரர்களில் மரணத்தில்) தம்முடன் சேராமல் (இவ்வுலகில் உயிருடன்) இருப்போரைப் பற்றி, ம்அவர்களுக்கு எவ்வித பயமுமில்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள் எனக் கூறி மகிழ்வடைகிறார்கள். அல்லாஹ்விடமிருந்து தாங்கள் பெற்ற அருட்கொடைகள் பற்றியும், மேன்மையைப் பற்றியும் நிச்சயமாக அல்லாஹ் இறைநம்பிக்கையாளர்களுக்குரிய நற்கூலியை (சிறிதும்) வீணாக்கி விடுவதில்லை என்பதைப் பற்றியும் மகிழ்வடைந்தோராய் இருக்கின்றார்கள். (திருக்குர்ஆன் 3:169-171)

இவ்வசனங்களிலிருந்து இறைவன் பக்கம் உயர்த்தப்பட்டு, உயிருடன் இருப்பவர் இயேசு மட்டுமல்ல. இறைவன் பாதையில் உயிர் நீத்த உயிர்த்தியாகிகளும்தான் என்றே குர்ஆன் கூறுகிறது. இதனால் இறைவன் பக்கம் உயர்த்தப்பட்டு இன்றளவும் உயிருடன் இருக்கும் இயேசுவை தெய்வீக அம்சம் பொருந்தியவர் என்று கூறிடமுடியாது. இன்னும் பைபிள் மொழியில் கூறுவதானால் இயேசு மட்டுமல்ல, எலியாவும் ஏனோசுக்கும் அவ்வாறு உயர்த்தப்பட்டவர்கள் ஆவார்கள்.

(எலியாவும் எலீஸாவும்) அவர்கள் பேசிக் கொண்டு நடந்து போகையில், இதோ, அக்கினிரதமும் அக்கினிகுதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து, இருவரையும் பிரித்தது. எலியா சுழற்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப் போனான். அதை எலிஷா கண்டு, என் தகப்பனே, என் தகப்பனே இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாய் இருந்தவரே என்று புலம்பினான். அவனை அப்புறம் காணவில்லை... (ஒஓ ராஜாக்கள் 2:11,12)

ஏனோக்கு அறுபத்தைந்து வயதான போது, மெத்தூசலாவைப் பெற்றான். ஏனோக்கு மெத்தூசலாவை பெற்றபின், முந்நூறு வருஷம் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். ஏனோக்குடைய நாளெல்லாம் முந்நூற்று அறுபத்தைந்து வருஷம். ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணாமற் போனான். தேவன் அவனை எடுத்துக் கொண்டார்.“ (ஆதியாகமம் 5:21-24)

இறைவன் இயேசுவை தன்னளவில் உயர்த்திக் கொண்டதால், அவர் கடவுள் என்றோ கடவுளின் குமாரர் என்றோ கருதப்படுவாரானால், எலியாவையும் ஏனோக்கையும் கடவுள் அல்லது கடவுளின் குமாரன் என்று கூறியிருக்க வேண்டுமே? ஆனால், அவ்வாறு எவரும் கூறியதில்லையே ஏன்?

### 4. இயேசுவின் இரண்டாம் வரவு

உலக இறுதி நாளுக்கு முன்பு இயேசு திரும்ப வருவார் என்றும், உலகையே தம் ஆட்சியின் கீழ் கொண்டு வருவார் என்றும் முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்களே, உண்மை இரட்சகர் இயேசுவேயாகும் என்பதையல்லவா இது உறுதிபடுத்துகிறது?

I. இயேசு இவ்வுலகிற்கு திரும்பவும் வருவார் என்று கூறும் நபி மொழிகள் பல உள்ளன, என்றாலும் இது இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைகளை மாற்றக்கூடிய விஷயமும் அல்ல. இயேசுவின் வருகையை முன்னறிவிப்புச் செய்யும் நபிமொழிகளை ஆய்வோமானால், அவையெல்லாம் இயேசுவைப் பின்பற்றுவதாகக் கூறி, இயேசுவின் மீது கற்பனையாக கட்டிவைத்துள்ள நம்பிக்கைகளை தகர்க்கவே செய்கின்றன. இயேசுவின் வரவு குறித்து முன்னறிவிப்பு செய்யும் நபிமொழிகள் கூறும் விவரங்களை இவ்வாறு தொகுக்கலாம்.

இயேசுவின் வருகை முஹம்மது நபி(ஸல்) அவர்களை பின்பற்றக் கூடியவர் என்னும் நிலையில் ஆகும்.

II. இயேசு புதியதொரு வேதத்தையோ, போதனையையோ கொண்டு வருபவர் அல்ல. முஹம்மத்(ஸல்) அவர்கள் கொண்டு வந்த வேதத்தையும், போதனையையும் நடைமுறையில் கொண்டு வருபவர்தான்.

III. இயேசு தொழுவது முஹம்மத்(ஸல்) அவர்கள் கற்றுத்தந்த விதத்திலேதான் இருக்கும். தொழுகையில் (இமாமாக) தலைமை ஏற்று தொழுகை நடத்துபவர் முஸ்லிம்களில் ஒருவராக இருப்பார். இயேசு அந்த இமாமைப் பின்பற்றி தொழக் கூடியவராக இருப்பார்.

IV. இயேசு, முஹம்மத்(ஸல்) அவர்களை பின்பற்றி வாழும் விசுவாசிகளுக்கு தலைமை ஏற்று போர் செய்வார். இஸ்லாம் அல்லாத மதங்களுக்கு எதிரான போர் பிரகடனமே இயேசுவின் போர் பிரகடனம்.

V. இயேசுவின் இரண்டாம் வருகையின் இலட்சியம் இவைகளாகவே இருக்கும்.

1. சிலுவையை உடைப்பது
2. ஜிஸ்யாவை இல்லாமல் ஆக்குவது (அதாவது ஜிஸ்யா வழங்க வேண்டிய நிலையே வராது)
3. ஹஜ் - உம்ராவை நிறைவேற்றுவது.

4. தஜ்ஜாலை (அந்தி கிறிஸ்துவை)யும் அவனின் ராணுவத்தையும் அழிப்பது.

முஹம்மத்(ஸல்) அவர்களைப் பின்பற்றி நடக்கும் இயேசு, இஸ்லாம் மட்டுமே மோட்சத்திற்குரிய மார்க்கம் என்று உரத்துக் கூறி, பிரச்சாரம் செய்து, மற்ற மதங்களை இல்லாமல் ஆக்குவார். அதற்காக 40 வருடங்கள் வாழ்ந்து இலட்சியத்தை பூத்தியாக்கிவிட்டு மரணிப்பார்.

## VI. கிறித்தவர்களின் சாட்சியம்

திருக்குர்ஆனின் கூற்றுகளை உண்மைப்படுத்தும் விதத்தில் கிறித்தவ அறிஞர்கள் அவ்வப்போது கூறுவதுண்டு, எழுதுவதுண்டு. A.C கிளைட்டன் தன்னுடைய பைபிள் நிகண்டுவில் கூறுகிறார்:

முதல் மூன்று சுவிசேஷங்களிலும் இயேசு மனிதத் தன்மை உள்ளவர் என்றே காணப்படுகிறது. இயேசு உடலாலும் அறிவினாலும் தன்மையாலும் இயல்பாலும் சாதாரண ரீதியிலான வளர்ச்சியைப் பெற்றிருந்தார், பசியும் தாகமும் அவர் அனுபவத்தில் உண்டு. தொல்லைகளை சந்தித்தார். சகித்தார். மகிழ்ச்சி, துக்கம், அன்பு, பாசம், கோபம் முதலியவற்றை, எல்லா மனிதர்களைப் போன்றே அவரிடம் இடம் பெற்றிருந்தது. சாதாரண மனிதர்களை விட ஞானம் அதிகமாக பெற்றிருந்தாலும், சர்வ ஞானியாக, யாவற்றிலும் மிகைத்தவராக இருக்கவில்லை... அத்திமரத்தில் பழமிருக்கும் என்றெண்ணிச் சென்று பார்த்தபோது, பழமில்லாதது கண்டு ஏமாற்றத்துடன் திரும்பியிருக்கிறார். அவர் செய்த அற்புதங்கள் எல்லாம் சொந்தமாக செய்தது கிடையாது. இறைநம்பிக்கையின் அடிப்படையில் செய்ததாகும். இயேசு அவதார புருஷனாக வந்தபோது, அவரிடம் மனித தன்மையும் இறைத் தன்மையும் ஆக இருதன்மைகள் இருந்ததாக சிலர் கருதுகினறனர். அதற்கு இந்த சுவிசேஷங்களில் எந்தவொரு ஆதாரமுமில்லை“ (பைபிள் நிகண்டு பக்கம் 413)

பிரபல கிறித்தவ அறிஞரான ரவரண்ட் சிரத்ஸ் என்டேம்ஸன் ஸ்கோட்டு கூறுகிறார்:

முதல் மூன்று சுவிசேஷங்களின்“ (மத்தேயு, மாற்கு, •லூக்கா) ஆசிரியர்கள் இயேசு கிறிஸ்துவை ஒரு மனிதர் என்னும் நிலையை விடுத்து, அதற்கு மேல் எந்த ஒரு நிலையிலும் கண்டதாக கருத இடமில்லை. அவர்களுடைய பார்வையில் இயேசு ஒரு மனிதராக இருந்தார். இறைவனின் ஆத்மாவினால் உண்டான ஒரு மனிதன் இறைவனோடு எப்போதும் தொடர்பு கொண்டிருந்த ஒரு மனிதன், தன் மூலம் அவரை தெய்வகுமாரன் என்று அழைப்பதாக இருந்தால், அது அனுப்பட்ட தன் ரீதியிலாக இருக்கும். மத்தேயு இயேசுவை தச்சனுடைய குமாரன் என்று கூறுகின்றார். ஓரிடத்தில் பேதுரு, இயேசுவை மெஸய்யாவாக அங்கீகரித்த பின்னரும், ம்அவரைத் தனியாக அழைத்துச் சென்று, உபதேசிக்கத் துவங்கினார் என்று உள்ளது. (மத்தேயு 16:22) சிலுவை சம்பவத்திற்கு பின்பு இயேசுவின் இரு சிஷ்யர்கள் எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போய் இயேசு ஒரு தீர்க்கதரிசி என்றே கூறியிருக்கின்றார்கள் என்று லூக்காவில் கூறப்பட்டுள்ளது, ம்நாசரே யனாகிய இயசேுவைக் குறித்தவைகளே, அவர்கள் தேவனுக்கு முன்பாகவும் ஜனங்களெல்லாருக்கும் முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார்“ (லூக்கா 24:19) இங்கே ஒரு விஷயம் முக்கியமாக கவனிக்கத்தக்கதாகும். அதாவது சுவிசேஷங்களிலே முதலாவதாக எழுதப்பட்ட சுவிசேஷமான மாற்கில் எந்த இடத்திலும் இயேசுவை, ம்லோர்டு (கர்த்தாவே) என்று அழைத்ததாக காண முடியவில்லை. அந்த பதம் இறைவனுக்கு மட்டுமே உபயோகப் படுத்தியுள்ளதாக காண முடிகிறது“ இன்னும் என். டேம்ஸன் தொடர்ந்து கூறுகிறார்: இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் பற்றியும், அதன் மகிமைப்பற்றியும் மூன்று சுவிசேஷங்களிலும் கூறப்பட்டுள்ளது ஆனால், ம்அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்“ (மாற்கு 1045) என்னும் மாற்கின் வசனங்களையும், இறுதி பஸ்காவில் நடந்த சில உரையாடல்களையும் தவிர்த்தால் அந்நிகழ்ச்சிக்கு

பிற்காலத்தில் கொடுக்கப்பட்ட பொருளை முற்காலத்தில் எந்த சசூழ்நிலையிலும் கொடுத்ததாக காண முடியாது. மனிதனின் பாவம் பற்றியோ, பாவவிமோசனம் பற்றியோ, அவர் மரணத்துடன் தொடர்பு உண்டு என்று கூறும்படியான எந்த ஓர் ஆதாரமும் அந்த சுவிசேஷங்களில் காணமுடியவில்லை.

(ஆதாரம்: இயேசு குர்ஆனில் பக்கம் 38,39)

முதல் மூன்று சுவிசேஷங்களிலிருந்தும் வித்தியாசமான ரீதியில் இயேசுவை கருதுவதற்கான ஆதாரங்கள், நான்காம் சுவிசேஷமான யோவானில் உண்டு. இயேசு பேசியது அராமிக் மொழியாகும். ஆனால், சுவிசேஷங்கள் எழுதப்பட்டது கிரேக்க மொழியிலாகும். இயேசுவுக்குப் பின் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்த கிரேக்க மொழி பேசக் கூடியவர்களாலேயே சுவிசேஷங்கள் எழுதப்பட்டது. சுவிசேஷங்களில் முதல் மூன்றும் இயற்றப்பட்டது கி.பி 70 களிலும் அல்லது அதற்குப் பின்பாக இருந்தாலும் நான்காம் சுவிசேஷமான யோவான் இயற்றப்பட்டது. இயேசுவின் காலத்திற்குப்பின் ஒரு நூற்றாண்டுக்குப் பின் உள்ளவையாகும், அதுவும் மத்திய ஆசியாவிலுள்ள இபீஸ்‘ பட்டணத்தில் வைத்தேயாகும். இதனால் மற்ற சுவிசேஷங்களை விட மாறுப்பட்ட கருத்துக்களை யோவானில் காண முடிகிறது

(விரிவான விளக்கத்திற்கு இஸ்லாத்திற்கு எதிரான கிறிஸ்தவ விமர்சனங்களும் விளக்கங்களும் பாகம் 1 காண்க)

## V நம்பிக்கையும் நல்லுபதேசமும்

இயேசு ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் தூதராக இருக்கிறார், தந்தையின்றி அற்புதமாக பிறந்தார்.

அவர் தாய் பரிசுத்தமானவரும் தலைசிறந்த இறை விசுவாசிகளில் ஒருவருமாவார்.

இயேசு இறைவன் அனுமதியுடன் இறந்தவருக்கு உயிர் கொடுத்து எழுப்பினார், பிறவிக் குருடர்களுக்கு பார்வை வழங்கினார் குஷ்டரோகிகளை குணப்படுத்தினார். இன்னும் பல அற்புதங்களைச் செய்தார்.

அவர் சிலுவையில் அறையப்படவுமில்லை. கொல்லப்படவுமில்லை. இறைவன் தன் புறத்தில் அவரை உயர்த்திக் கொண்டான். மீண்டும் இவ்வுலகிற்கு அவர் வருவார். முஹம்மத்(ஸல்) அவர்களைப் பின்பற்றி வாழக்கூடிய இறைநம்பிக்கையாளர்களில் ஒருவராக அவர் இருப்பார்.

இவற்றை நம்பும் படி இஸ்லாம் பணிக்கிறது. இயேசுவை கண்ணியப்படுத்தி மகத்துவப்படுத்தும் ஒரே வேத கிரந்தம் திருக்குர்ஆன் மட்டுமே ஆகும். இன்னும், இயேசு உட்பட இறைவனால்அனுப்பட்ட அனைத்து தூதர்களையும் ஏற்று கண்ணியப்படுத்த வேண்டும் என்றும் இறைவேதம் பணிக்கிறது.

(இறைநம்பிக்கையார்களே!) ம்நாங்கள் அல்லாஹ்வையும், எங்களுக்கு இறக்கப்பட்ட (வேதத்)தையும், இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் இன்னும் அவர் சந்ததியினருக்கு இறக்கப்பட்டதையும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் கொடுக்கப்பட்டதையும் இன்னும் மற்ற நபிமார்களுக்கும் அவர்களின் இறைவனிடமிருந்து கொடுக்கப்பட்டதையும் நம்புகிறோம், அவர்களின் நின்றும் ஒருவருக் கிடையேயும் நாங்கள் வேறுபாடு காட்டமாட்டோம்: இன்னும் நாங்கள் அவனுக்கே முற்றிலும் வழிபடுகிறோம் என்று கூறுவீர்களாக! (திருக்குர்ஆன் 2:136)

அதனால்தான் முஸ்லிம்கள் இயேசுவின் பெயரைக் கேட்கும் போதும், மற்ற தூதர்களின் பெயர்களைக் கேட்கும்போதும் ம்அவர்களுக்கு ஏக இறைவனின் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டுமாக“ (அலைஹிஸ்ஸலாம்) என்று பிராத்திக்கிறார்கள்.

என் அன்பிற்குரிய கிறித்தவர்களே! நீங்கள் இயேசுவை கடவுள் என்றோ கடவுளின் குமாரன் என்றோ கூறாதீர்கள். அல்லாஹ்வும், இயேசுவும், பரிசுத்த ஆவியும் ஆகிய மூன்றும் ஒன்று என்றும் கூறாதீர்கள்.

நிச்சயமாக அல்லாஹ் மூவரில் மூன்றாமவன் என்று கூறியவர்கள் இறைமறுப்பாளர்களாக ஆகிவிட்டார்கள், ஏனென்றால், ஒரே இறைவனைத் தவிர, வேறு நாயன் இல்லை. அவர்கள் சொல்வதை விட்டும் அவர்கள் விலகவில்லையானால், நிச்சயமாக அவர்களில் மறுப்பாளர்களை துன்புறுத்தும் வேதனை கட்டாயம் வந்தடையும். (திருக்குர்ஆன் 5:73)

வேதத்தையுடையோரே! நீங்கள் உங்கள் மார்க்கத்தில் அளவு கடந்து செல்லாதீர்கள். அல்லாஹ்வைப் பற்றி உண்மையைத் தவிர (வேறெதையும்) கூறாதீர்கள். நிச்சயமாக மரியமின் மகனாகிய ஈஸா அல் மஸீஹ் அல்லாஹ்வின் தூதர் தான். இன்னும் (ம்குன்' ஆகுக என்ற) அல்லாஹ்வின் வாக்காக (அதனால் உண்டானவராகவும்) இருக்கின்றார்.: அதை அவன் மர்யமின் மீது போட்டான். (எனவே) அவரும் அவனிடமிருந்து (வந்த) ஓர் ஆத்மாதான்: ஆகவே, அல்லாஹ்வின் மீதும் அவன் தூதர்கள் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள் இன்னும், (வணக்கத்திற்குரிய இறைவன்) மூன்று என்று கூறாதீர்கள் (இப்படிக் கூறுவதை விட்டு) விலகிக் கொள்ளுங்கள். (இது) உங்களுக்கு நன்மையாகும் - ஏனெனில், வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ் ஒருவன்தான், அவனுக்கு எவரும் சந்ததியாக இருப்பதிலிருந்து அவன் தூய்மை யானவன். வானங்களிலும் பூமியிலும் இருப்பவை எல்லாம் அவனுக்கே சொந்தம். (காரியங்கள் அனைத்துக்கும்) பொறுப்பேற்றுக் கொள்வதற்கு அல்லாஹ்வே போதுமானவன். (திருக்குர்ஆன் 4:171)